




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 205 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 205 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# சர்வதேச சந்தைக்கு ஏற்ப இந்திய வேளாண் பொருள்கள்

## விவசாயிகளுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள்

**புதுடெல்லி, மார்ச்.8:**

இந்திய வேளாண் பொருள்களை சர்வதேச சந்தைக்கு ஏற்றவாறு ஏற்றுமதி நோக்குடனும், உலகளவில் போட்டியிடக்கூடியதாகவும் மாற்ற வேண்டும் என்று விவசாயிகளை பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

தில்லியில் வெள்ளிக்கிழமை 'வேளாண்மை மற்றும் கிராமப்புற மாற்றம்' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில் பங்கேற்ற பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவில் பல்வேறு வகையான காலநிலைகளைப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், ஏற்றுமதி வாய்ப்புகளை உயர்த்தவும் விவசாயிகள் முயற்சிக்க வேண்டும். இந்திய வேளாண்மைப் பொருள்களை சர்வதேச அளவில் போட்டியிடக் கூடியதாக மாற்ற, அதிக மதிப்புள்ள பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

வாய்ப்புகள் உள்ள நாடு: இன்று சர்வதேச சந்தைகள் அனைவருக்குமானதாக திறக்கப்பட்டுள்ளது. உலகளாவிய தேவைகளும் மாறி வருகின்றன. எனவே, நமது வேளாண்மையை ஏற்றுமதி நோக்கத்துடன் மாற்றுவது அவசியம். நமது நாட்டில் பல்வேறு காலநிலைகள் உள்ளன. அவற்றை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இந்தியா பல்வேறு காலநிலைகளில் வளரும் பயிர்களை உற்பத்தி செய்ய வாய்ப்புகள் உள்ள வளமான நாடு.

ஏற்றுமதியைக் கருத்தில்கொண்டு வேளாண்மை உற்பத்தி நடைபெறும்போது, அவற்றைப் பதப்படுத்துவது, மதிப்புக்கூட்டுவது போன்றவற்றின் மூலம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

பட்ஜெட் திட்டங்கள்: 2026-27 பட்ஜெட்டில் அதிக மதிப்புள்ள வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதில் முந்திரி, கோகோ, சந்தன மரம் உள்ளிட்ட பயிர்கள் அடங்கும். தேசிய சமையல் எண்ணெய் உற்பத்தி அதிகரிப்புத் திட்டம், பருப்பு உற்பத்தி அதிகரிப்புத் திட்டம், தேசிய இயற்கை வேளாண்மைத் திட்டம் ஆகியவை நமது வேளாண்மைத் துறையை வலுப்படுத்துகின்றன.

வடகிழக்குமாநிலங்களில் அகில் மரம் வளர்ப்புத் திட்டம், இமயமலையை ஒட்டிய மாநிலங்களில் உயர் மதிப்புள்ள வால்நட், பிஸ்தா, பாதாம் உள்ளிட்ட பயிர்களுக்கான திட்டங்களுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.



நாம் அனைவரும் இணைந்து உயர்ந்த மதிப்புள்ள வேளாண்மையை வளர்த்தால், அது இந்திய வேளாண்மையை உலகளவில் போட்டியிடக்கூடிய துறையாக மாற்றும்.

இயற்கை வேளாண்மை வாய்ப்புகள்: உலகம் இன்று ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துகிறது. எனவே, ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பாரம்பரிய உணவுப் பொருள்கள் மற்றும் இயற்கை விவசாயம் அதிகம் முக்கியத்துவம் பெற்று வருகிறது. ரசாயனங்களைப் பயன்படுத்தாத இயற்கை விவசாயத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இயற்கை முறையிலான உற்பத்தி சர்வதேச சந்தைகளுக்கு செல்லும் பெரிய பாதையாக இருக்கும்.

இந்தியாவின் நீண்டகால வளர்ச்சிப் பயணத்தின் முக்கியத் தூண்களில் ஒன்றாக வேளாண்மை உள்ளது. பிரதமரின் விவசாயிகளுக்கான நிதி உதவித் திட்டம் மூலம் சுமார் 10 கோடி விவசாயிகள் ரூ.4 லட்சம் கோடிக்கு மேல் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் மத்திய பட்ஜெட் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கு பெரிய ஊக்கத்தை அளித்துள்ளது.

மீன்வள மேம்பாடு: இந்தியா உலகில் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தி நாடு. நாட்டின் குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் தற்போது சுமார் 4.5 லட்சம் டன் மீன் உற்பத்தி நடைபெறுகிறது. மேலும் 20 லட்சம் டன் கூடுதல் உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது. இதன்மூலம் மீன்வள ஏற்றுமதி வளர்ச்சிக்கான முக்கியத் தளமாக இந்தியா உருவெடுக்க முடியும்.

மீன் குஞ்சு பொறிப்பகங்கள், மீன் தீவனங்கள், இது சார்ந்த போக்குவரத்து ஆகியவற்றில் வர்த்தகரீதியாக புதிய முன்மாதிரிகள் உருவாக்கப்பட வேண்டும். இது இந்தியாவின் நீலப் பொருளாதாரத் திறனை முழுமையாகப் பயன்படுத்த உதவும், கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக்கு அதிகம் உதவும் துறையாக இது உயரவும்.

வேளாண்மையில் தொழில்நுட்பத்தைக் கொண்டுவருவதில் அரசு அதிக கவனம் செலுத்துகிறது. 'லட்சாதிபதி சகோதரிகள்' திட்டத்தில் 2029-ஆம் ஆண்டுக்குள் மேலும் 3 கோடி பெண்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக உருவாக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன என்று பிரதமர் மோடி பேசினார்.

## மார்ச் 9 முதல் மீண்டும் கூடுகிறது நாடாளுமன்றம்! மக்களவைத் தலைவருக்கு எதிரான தீர்மானம் தாக்கலாகிறது!

**புதுடெல்லி, மார்ச்.7:**

நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9-ஆம் தேதி தொடங்கி ஏப்.2 வரை நடைபெறவுள்ளது.


மக்களவைத் தலைவரை பதவி நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் தீர்மானம் மார்ச் 9-இல் தாக்கல் செய்யப்படவுள்ளது. எனவே, அவை அலுவல்களில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று தத்தமது எம்.பி.க்களுக்கு ஆளும் பாஜகவும், எதிர்க்கட்சியான காங்கிரஸும் கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளன.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஜன. 28-ஆம் தேதி குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கியது. கடந்த பிப்.13-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முதல்கட்ட அமர்வில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன.

முன்னாள் ராணுவ தலைமைத் தளபதி எம்.எம். நரவணேயின் வெளியிடப்படாத சுயசரிதை நூல் சர்ச்சை, இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் ஆவணங்கள் விவகாரம் எனப் பல்வேறு பிரச்னைகளை எழுப்பி, மத்திய அரசுடன் மோதல்போக்கை கடைப்பிடித்தன.

அவைத் தலைவருக்கு எதிராக தீர்மானம்: கடந்த பிப். 3-ஆம் தேதி மக்களவையில் காகிதங்களைக் கிழித்து, அவைத் தலைவர் இருக்கையை நோக்கி வீசியதற்காக எதிர்க்கட்சி எம்.பிக்கள் 8 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர். மறுநாள், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பிரதமர் மோடி உரையாற்றவிருந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் கடும் அமளியால் அவரது உரை தவிர்க்கப்பட்டது. பிரதமருக்கு எதிராக 'எதிர்பாராத செயலில்' ஈடுபட காங்கிரஸ் எம்.பி.க்கள் திட்டமிட்டிருந்ததாகவும், எனவே, அவைக்கு வர வேண்டாம் என பிரதமரிடம் கேட்டுக் கொண்டதாகவும் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்த கருத்துகள் பரபரப்பை ஏற்படுத்தின.

இதையடுத்து, ஓம் பிர்லா முற்றிலும் பாரபட்சத்துடன் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, அவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரி தீர்மானம் கொண்டுவர காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தரப்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டது.



மார்ச் 9-இல் தீர்மானம்: இந்தச் சூழலில் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9-இல் தொடங்கி ஏப்.2 வரை நடைபெறவுள்ளது. முதல் நாள் அலுவலில் மக்களவைத் தலைவருக்கு எதிரான தீர்மானம் பட்டியலிடப்பட்டுள்ளது. இதையொட்டி, அவை அலுவல்களில் தவறாமல் பங்கேற்கும்படி, தத்தமது எம்.பி.க்களுக்கு பாஜகவும், காங்கிரஸும் கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளன.

அரசமைப்புச் சட்டத்தின் 94சி பிரிவின்கீழ், பெரும்பான்மை வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றி மக்களவைத் தலைவரை பதவிநீக்கம் செய்ய முடியும்.

'மேற்காசிய நிலவரம் குறித்து விவாதிக்க வேண்டும்'

நாடாளுமன்ற இரண்டாம் கட்ட அமர்வில், மேற்காசிய நிலவரம் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கட்சியின் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், 'இந்தியாவின் உலகளாவிய நிலைப்பாடு, இப்போது இருப்பதுபோல் ஒருபோதும் பலவீனமாக இருந்ததில்லை; சர்வதேச அளவில் பிரதமர் மோடி அரசு பலம் குன்றி, சுருங்கிவிட்டது. அமெரிக்காவுக்கு மட்டுமன்றி இஸ்ரேலுக்கும் பணிந்து செல்லும் நிலைக்கு இந்தியாவை தள்ளிவிட்டனர்.

இந்தியாவில் எதிர்க்கட்சித் தலைவர்களை அவமதிக்க எந்த முயற்சியையும் விட்டுவைக்காத பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் நடவடிக்கைகள் குறித்து வாய்திறப்பதில்லை என்றும் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்தார்.

## தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஆக.30 வரை டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு

**சென்னை, மார்ச்.8:**

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வந்தது. கடைசியாக 2011-ம் ஆண்டு நடைபெற்றது. அதைத்தொடர்ந்து, 2021-ம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரோனா பரவல் காரணமாக மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி தள்ளிவைக்கப்பட்டது.

இப்பணிகள் ரூ.11,718.24 கோடியில் இருகட்டங்களாக நடத்தப்படும் என்றும், முதற்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டு 2026 ஏப்ரலில் தொடங்கி, செப்டம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்பணியில் 30 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மத்திய அரசு உத்தரவுப்படி, தமிழகத்தில் நடைபெறும் மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஜூலை 31-ம் தேதி வரை மக்கள் சுயமாக மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்களை இணையவழியில் பதிவிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆக.1 முதல் 30-ம் தேதிக்குள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியில் அரசு ஆசிரியர்கள், களப்பணியாளர்கள், மாவட்டம், துணை மாவட்டம் மற்றும் மாநில அளவிலான பிற மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் என சுமார் 1.20 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

தங்கள் வழக்கமான பணிகளுடன் கூடுதலாக மக்கள்தொகைகணக்கெடுப்பின் களப்பணியையும் செய்வார்கள். அதற்காக அவர்களுக்கு மதிப்பூதியமும் வழங்கப்பட உள்ளது.

இந்த கணக்கெடுப்பில், வீட்டுவசதி நிலை, வசதிகள் மற்றும் சொத்துகள், வீட்டு உறுப்பினர்கள் எண்ணிக்கை, மதம், எஸ்சி மற்றும் எஸ்டி, மொழி, எழுத்தறிவு மற்றும் கல்வி, பொருளாதார செயல்பாடு, இடம்பெயர்வு உள்ளிட்ட 33 கேள்விகளுடன் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட உள்ளன. டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக, மக்கள்தொகை கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (சிஎம்எம்எஸ்) போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.60 உயர்வு

**புதுடெல்லி, மார்ச்.8:**

ஈரான் - இஸ்ரேல் இடையிலான போர் தீவிரமடைந்து வரும் நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் எரிசக்தி விலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் இந்தியாவில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, வீட்டு உபயோகத்துக்கான 14.2 கிலோ எடையுள்ள மானியம் இல்லாத சிலிண்டரின் விலை சிலிண்டருக்கு ரூ.60 உயர்த்தப்பட்டுள்ளது.



இதன் மூலம் சென்னையில் ஒரு சிலிண்டரின் விலை 928.50 ரூபாயாகவும், டெல்லியில் 913 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. கொல்கத்தா, மும்பை போன்ற மற்ற பெருநகரங்களிலும் இதே போன்ற விலை உயர்வு அமலுக்கு வந்துள்ளது.

வணிக பயன்பாட்டிற்கான 19 கிலோ எடையுள்ள சிலிண்டர்களின் விலை 115 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் சென்னையில் வணிக சிலிண்டரின் விலை 2,043.50 ரூபாயாக உயர்ந்துள்ளது, இது உணவகங்கள் மற்றும் சிறு தொழில்களில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்க வழிவகுக்கும் என்று அஞ்சப்படுகிறது.

போர் சூழலால் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சத்தில் பொதுமக்கள் அதிக அளவில் சிலிண்டர்களை முன்பதிவு செய்வதைத் தவிர்க்க, இரண்டு சிலிண்டர் முன்பதிவுகளுக்கு இடையே 21 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை எண்ணெய் நிறுவனங்கள் மீண்டும் அமல்படுத்தியுள்ளன.

குறிப்பாகக் கொல்கத்தா போன்ற நகரங்களில் முன்பதிவு வழக்கத்தை விட 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏதும் இல்லை என்றும், அடுத்த 50 நாட்களுக்குத் தேவையான கையிருப்பு இருப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.







## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(8-03-2026)
விசுவாவசு ஆண்டு, மாசி-24
பிறை: தேய்பிறை
திதி
பஞ்சமி இரவு 10.00 வரை
பிறகு சஷ்டி
நட்சத்திரம்:
சுவாதி பிற்பகல் 2.19 வரை
பிறகு விசாகம்.
யோகம்
சித்த /மரணயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | அமைதி |
| ரிஷபம் | மாற்றம் |
| மிதுனம் | வரவு |
| கடகம் | இன்பம் |
| சிம்மம் | புகழ் |
| கன்னி | ஊக்கம் |
| துலாம் | உதவி |
| விருச்சிகம் | ஆதரவு |
| தனுசு | பெருமை |
| மகரம் | ஆக்கம் |
| கும்பம் | போட்டி |
| மீனம் | சிறப்பு |

## உயர் நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி பொறுப்பேற்பு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்



**சென்னை, மார்ச்.8:**

சென்னை உயர் நீதிமன்றத்தின் 55-வது தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி பிரமாணம் செய்து வைத்தார். சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த எம்.எம்.ஸ்ரீவஸ்தவா நேற்று முன்தினம் ஓய்வு பெற்றார்.

இதையடுத்து, 55-வது தலைமை நீதிபதியாக, சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரியை நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார். கேரள உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக பதவி வகித்து வந்த இவர் சட்டீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

இந்நிலையில், ஆளுநர் மாளிகையில் தர்மாதிகாரி பதவியேற்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. புதிய தலைமை நீதிபதியாக தர்மாதிகாரியை நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பிறப்பித்த உத்தரவை தலைமைச் செயலர் நா.முருகானந்தம் வாசித்தார்.

இதைத் தொடர்ந்து, ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைக்க, சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரி உறுதிமொழி ஏற்றுக்கொண்டு, தலைமை நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.

## மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி




**சென்னை, மார்ச் 08:** வடசென்னை கிழக்கு மாவட்ட SDPI கட்சி மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அணி சார்பில் 06-03-2026 அன்று நடைபெற்ற மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி பழைய வண்ணாரப்பேட்டை MKS மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் திரு.மூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி R.பிரியா, வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மதாரம்மா கனி பாரூக் உட்பட முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். மேலும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இளையான்குடி வட்டாரம் சமுதாய வளைகாப்பு விழா




**மானாமதுரை, மார்ச்08:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டாரம் சமுதாய வளைகாப்பு விழா இளையான்குடி எம் எம் மகாலில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் இளையான்குடி பேரூராட்சி தலைவர் நஜுமுதீன், இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் தமிழ் மாறன், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயசுதா, கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் சுப தமிழரசன் பேரூராட்சி துணை தலைவர் இப்ராஹிம் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன், பொறுப்பாளர் வளர்மதி கலைச்செல்வன், ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன் பேரூர் நிர்வாகிகள் தெளலத், நடராஜன், ஜெயினுலாபுதீன், கம்பன் காதர், இப்ராஹிம் ஷா, கிரேஸ் ஆரோன் கிங், பாக்கியராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழாவில் கர்ப்பிணி பெண்கள் அனைவருக்கும் புடவைகள் மற்றும் மங்கள பொருட்கள் தமிழரசி எம்எல்ஏ வழங்கினார்.

## ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு சுக்கிர வாரம் ஊஞ்சல் உற்சவம்







**திருவண்ணாமலை,மார்ச் 08:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதம் சுக்கிரவாரத்தை முன்னிட்டு பாலசுப்பிரமணியன் ஐயர் அவர்களால் நம் வாசவி அம்மன் ஆலயத்தில் அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், சந்தனம், பன்னீர், வெட்டிவேர், இளநீர்,தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், வண்ணப் பூக்களால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

மற்றும் உற்சவர் தேரில் அமர்த்தி ஆலயம் மூன்று முறை வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்களை இசைக்க ஆலயம் சுற்றி வந்தன.மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஊஞ்சல் உற்சவம் பாட்டுக்கள் பாடி மகாதீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. சுக்கிரவாரம் பூஜை உபயதாரர்:T. பொன்னிவளவன் பாரதி லட்சுமி அவர்கள் BSNL (Rtd) குடும்பத்தினர்கள் திருவண்ணாமலை.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயத்தில் தமிழ்நாடு இ பேப்பர்.காம் வாசகர்கள் சார்பாக சங்கடஹர சதுர்த்தி விசேஷ அபிஷேக ஆராதனைகள்









பரங்கிப்பேட்டை மெயின் ரோடு அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயத்தில் தமிழ்நாடு இ பேப்பர். காம் வாசகர்கள் சார்பாக சங்கடஹர சதுர்த்தி விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானை மனம், மொழி, மெய்களால் வணங்கி ஆனந்த உணர்வை பெற்றனர்.



## திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம் நிறுவனர் நாள் விழா

**திருச்சி, மார்ச் 08:** திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்க நிறுவனர் அமரர் தெ. துரைராசப்பிள்ளையின் 116 வது பிறந்த நாள் நேற்று முன்தினம் (06.03.26) கொண்டாடப்பட்டது.

இதில் நிறுவனர் நாள் விருதாளர் , திருக்குறள் செம்மல் திரு.நாவை சிவம் அவர்களுக்கு 50,000 ரூபாய் ரொக்கம் காசோலையாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் , தேசியக் கல்லூரி பேராசிரியர் நீலகண்டன் " மொழியும் வழியும்" என்ற தலைப்பில் பேசுகையில் காகமும், தூக்கணாங்குருவியும் அந்தக் கால வானிலை ஆய்வாளர்கள் என்றார்.

காகம் வேப்பமரத்தின் நுனியில் கூடு கட்டினால் அந்த ஆண்டு தென்மேற்கு மழை இராது என்றும், உள்ளே கூடு கட்டினால் மழை உண்டென்றும் அதேபோல் தூக்கணாங்குருவி வடதிசை நோக்கி கூடு கட்டினால் அந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை இராது என்றும், தென்திசை நோக்கி கட்டினால் மழை உண்டென்றும் அறியலாம் என்றார்.

திரு. நாவை சிவம் தன் ஏற்புரையில், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தமக்கு இப்பெயரைச் சூட்டியதாகக் கூறினார். 165க்கும் மேற்பட்ட குறள் நெறி திருமணங்கள் நடத்தி வைத்ததாகத் தெரிவித்ததுடன் , 48 ஆண்டுகளாக திருக்குறளை சிறியோர் முதல் பெரியோர் முதல் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள தமக்கு இவ்விருது அளிக்கப்பட்டது தன் பணியை இன்னும் சிறப்புறச் செய்ய வேண்டும் என உணர்த்துவதாகக் கூறி, தமிழ்சங்கத்திற்கு என்றென்றும் தாம் நன்றிக்கடன் பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

முன்னதாக நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய திரு. வரதராஜன் தமிழ்ச்சங்கம் அமைந்த வரலாற்றை கூறினார். வாழ்த்திப் பேசிய சங்கத்தின் அமைச்சர் திரு.பெ.உதயகுமார் வாழும் வள்ளுவர்- வாசுகி ஆக வீற்றிருக்கும் திரு.நாவை சிவம் அவர்களுக்கு இவ்விருது வழங்குவதில் திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம் பெருமை கொள்கிறது என்றார்.

மொழி வாழ்த்துடன் துவங்கிய நிகழ்ச்சியை ஜமால் முகமது கல்லூரி தேர்வு நெறியாளர் திரு.சையத் ஜாகீர்ஹசன் தொகுத்து வழங்கினார்.

முனைவர் செயலாபதி நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் சிறப்பு வழிபாடு



**மானாமதுரை,மார்ச் 08:** சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே உள்ள 140 ஆண்டுகள் புகழ்பெற்ற இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் ஆங்கில மாதம் முதல் வெள்ளிக்கிழமை யொட்டி, சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

இந்த வழிபாட் டுக்கு அருள்திரு டேவிட்ஆரோக்கியம் தலைமை வகித்தார். பவுலா ஜெயக்குமார், மரியான், எட்வர்ட் அந்தோணி ஆகியோர் சிறப்பு திருப்பலி நடத்தினர். திருத்தல அதிபர் ஜான் வசந்தகுமார் வழிபாட்டை ஒருங்கிணைத்தார். இதில் சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, விருதுநகர், திருச்சி, திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்திருந்த ஏராளமான கிறிஸ்தவர்கள் சிறப்பு வழிபாட்டில் பங்கேற்றனர்.

## 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்து பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கும் நிகழ்ச்சி





**திருவண்ணாமலை , மார்ச்08:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அணுக்குமலை ஊராட்சியில் 2026 சட்டமன்றத் தேர்தல் அதிமுகவில் தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை உயர்திரு எஸ். ராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் திருவண்ணாமலை கிழக்கு மாவட்டம் முன்னாள் அமைச்சர் பொதுமக்களிடம் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள் .

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 23-ஆம் ஆண்டு விளையாட்டு விழா



**ஈரோடு, மார்ச் 08:** ஈரோடு - மொடக்குறிச்சி - கஸ்பாபேட்டை - செல்லப்பம் பாளையம் தொடக்கப்பள்ளியில் 06.03.2026 அன்று 23-ஆம் ஆண்டு விளையாட்டு விழா மற்றும் ஆண்டுவிழா நடைபெற்றது.

விழாவை தலைமை ஆசிரியை S.உஷா, ஆசிரியை M.வசந்தா, மற்றும் முன்னாள் மாணவர்கள் S.கிருஷ்ணன், S.காசியப்பன், A.நடராஜன், C.மனோகரன் ஆகியோர் முன்னின்று நடத்தினர். கல்வித்துறை அதிகாரிகள், பக்கத்துப் பள்ளிகளின் ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர், பொதுமக்கள் வருகையால் பள்ளி வளாகம் நிறைந்து காணப்பட்டது.

ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மதிப்பெண் பெற்ற 5மாணவிகளுக்கு தலா ரூ500- வீதம் ரூ2500- செங்கரைப் பாளையம் தங்கம்மாள் அறக்கட்டளை சார்பிலும், முதல் மதிப்பெண் பெற்ற 5 மாணவர்களுக்கு தலா ரூ500 வீதம் ரூ2500- செங்கரைப்பாளையம் தோட்டக்காட்டு நல்லப்ப கவுண்டர் அறக்கட்டளை சார்பிலும் வழங்கப்பட்டன.

மேலும் பள்ளிக்கு விடுமுறையே எடுக்காமல் வருகை புரிந்த மாணவ மாணவிகளுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கப் பட்டது.

மாணவ மாணவிகள் கலைநிகழ்ச்சிகள் கண்களைக் கவர்ந்தன. பெண்கள், ஆண்கள், மாணவ மாணவியர் என தனித்தனியே விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இரவு 8.00 மணி அளவில் 23-ஆம் ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் தேசியகீதத்துடன் இனிதே நிறைவுற்றது. நன்றி! வணக்கம்!

## கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் விழா




சோனாலிகா ஆரோக்கியம் திட்டத்தின் மூலம் 120 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கும் விழா சக்கிமங்கலம் மருத்துவ அலுவலர் சந்திரலேகா மற்றும் எல்.கே.பி நகர் பள்ளி தலைமைஆசிரியர் தென்னவன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஊட்டச்சத்து பெட்டகங்களை தாய்மார்களுக்கு வழங்கினார்கள். இந்த திட்டமானது ஏகம் அறக்கட்டளை மூலம் சக்கிமங்கலம் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது.

## மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு சிறந்த சமூக சேவக ருக்குகான விருது

### இயக்குனர் கே.பாக்யராஜ் வழங்கினார்

**சென்னை, மார்ச்08:** அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை விழாவில், மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு பிரபல நடிகரும், இயக்குனருமான கே.பாக்யராஜ் சிறந்த சமூக சேவகருக்கான விருது வழங்கி பாராட்டினார். சென்னை நாரத கான சபாவில் 'அறம் செய்ய விரும்பு' அறக்கட்டளை மூலம் அறம் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. நீதியின் குரல் நிறுவனர் சி.ஆர்.பாஸ்கரன் தலைமை தாங்கினார். அறக்கட்டளை நிறுவனர் பூ.நல்லதம்பி வரவேற்றார். விழாவில் பிரபல இயக்குனர் கே.பாக்யராஜ் சிறப்பு விருந்தினராகபங்கேற்று பல்வேறு துறையில் சாதனை படைத்த



பெருமக்களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டினார்.

மதுரையின் அட்சயப் பாத்திரம் ட்ரஸ்ட் மதுரையில் கடந்த 6 ஆண்டுகளாக ரோட்டோரத்தில் உள்ள வறியவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மருத்துவமனைகளில் தினமும் 300 பேருக்கு, மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் மதிய உணவை வழங்கி வருகிறது.

இதுவரை சுமார் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட வறிய மக்களின் பசியாற்றும் சேவையை தொடர்ச்சியாக செய்து வரும் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு 'சிறந்த சமூக சேவகர்' விருதை கே. பாக்யராஜ் வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது; "சென்னையில் ரோட்டில் கிடந்த 35 பவுன் நகையை எடுத்த பெண் தூய்மைப் பணியாளர், உரிய நபரிடம் கொண்டு சேர்த்தார். இதுதான் அறம்.

இது போன்ற அறம் செய்வோர் நாட்டில் பலர் இருக்கின்றனர். அவர்கள் எதிர்பார்க்காவிட்டாலும் கூட, அவர்களை போற்றுவதும் பாராட்டுவதும் நமது கடமை. இது போன்ற செயல்களின் மூலமாக அறம் காக்கப்பட வேண்டும். தர்மம் தலைகாக்கும் என்பர்.

நம் தலையை காக்கும் என்ற சுயநலத்தோடு தர்மம் செய்யக்கூடாது அதனை தர்ம சிந்தனையோடு செய்ய வேண்டும். புகழ்பெற்ற கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில். நாடு முழுவதும் அவரது பெயரும் புகழும் ஓங்கி இருந்தது.

ரோம் நகரில் மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க, புகார்பெட்டி வைக்கும் வழக்கம் உண்டு. ஒரு சமயம் அரிஸ்டாட்டில் சாலையில் சென்றபோது, அங்கிருந்த முதியவர் புகார் பெட்டியில் போட ஒரு கடிதம் எழுத உதவும்படி சொன்னார். அவரிடம் புகார் என்னவென்று கேட்க, நாட்டில் எங்கு பார்த்தாலும் 'அரிஸ்டாட்டில்.. அரிஸ்டாட்டில்..' என அவர் பெயர் தான் கேட்கிறது. அதனால் அவரை நாடு கடத்த வேண்டும் என்றாராம். பெயர், புகழ் வந்தாலும் அதனை உச்சிக்கு எடுத்துச் செல்லக்கூடாது. அப்போதும் எளிமையோடும் பணிவோடும் இருக்க வேண்டும். இன்று விருது பெற்றிருக்கும் பண்பாளர்கள் அத்தகையவர்கள் தான். அறம் செய்தோருக்கு அறம் அறக்கட்டளை அறம் விருதுகளை வழங்கி அறத்தை நிலைநாட்டி இருக்கிறது. இவ்வாறு அவர் பேசினார். இவ் விழாவில் தமிழகத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டது.




















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901













## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஜெைவப்ர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872



# கவிதை அரங்கம்!




வாழ்க்கை
வெறும் கனவோ
என்றிருந்தேன்
நீயும் வந்தாய்
கலையாத
வண்ண கனவாய்

உன்
வருகை
தாலாட்டுது
மனதை
மாலைநேர
தென்றலாய்

நம் உலகத்தில்
உன்னென்
நிழலை தவிர
வேறதெற்கும்
இடமில்லை

இரு விழி
கவி எழுத
வீழ்ந்தேன்
உன் இதயத்தில்

# வாழ்க்கை தத்துவம்...



துன்பத்தை நினைத்து மகிழ்ச்சியை இழக்காதே,
காதலே நினைத்து வாழ்க்கையை இழக்காதே,
சோதனையை நினைத்து சாதனையை இழக்காதே,
தோல்வியை நினைத்து வெற்றியை இழக்காதே.

நம்மை உயர்த்தும் ஏழு விஷயங்கள்,
ஏழ்மையிலும் நேர்மை.
கோபத்திலும் பொறுமை.
தோல்வியிலும் விடாமுயற்சி.
வறுமையிலும் உதவி செய்யும் மனம்.
துன்பத்திலும் துணிவு.
செல்வத்திலும் எளிமை.
பதவியிலும் பணிவு.

வாழ்க்கையில் பெறவேண்டிய பதினாறு பேறுகள்,
புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்விதி, நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இனிமை, துணிவு, நோயின்மை, நீண்ட ஆயுள்.

மனதில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும்,

# தப்பு தாளங்கள்.!



*கார் கதவை விரைந்து சாற்றுவதிலும்.. வாசலில் கழட்டிய செருப்புகள் திசைதப்பி விசிறலாக மூலைக்கொன்றாய் விழுவதிலும்.. கடும் கோபத்தோடு கண்ணப்பன் வருவதை யூகித்து.. கையில் நீர்மோர் சொம்போடு எதிர்கொண்டாள் அவரது மனைவி மஞ்சுளா.

"ஏய்.. உன்கிட்ட ரெண்டு லட்ச ரூவா கொடுத்து.. வேட்டி சேலை வாங்கி ரெண்டு பஞ்சாயத்துகளில் வீடு தவறாம விநியோகம் பண்ணுன்னு சொன்னேன்ல... நீயும் உன் தம்பிகாரனும் சேர்ந்து ஐநூறு செட் மட்டுந்தான் எத்திராஜ் செட்டியார் கடையில வாங்கியிருக்கீங்க.. ரெண்டு பஞ்சாயத்துலயும் ஆயிரத்துஅறுநூறு வீடுகளுக்கு மேல வரும்.. எல்லா வீடுகளுக்கும் விநியோகம் பண்ணிட்டதா காதுகுத்தி கணக்கு காட்டி... பதினஞ்சு வயசுல இருந்து அரசியலை பார்த்து பழம் தின்னு கொட்டை போட்டவனை ஏச்சுபுடலாம்னு பார்க்கு றீங்களோ.."அக்னிப்பிழம்பாய் அள்ளி வீசினார் வார்த்தைகளை.

"ஏங்க.. பேசாம அமைதியா உட்கார்ந்து இந்த மோரை குடிச்சு கூல் ஆகுங்க... நான் விளக்கம் சொல்லுறேன் கேளுங்க.. வாசல்ல இருந்தே கூவிக்கிட்டு.. சாமியாடுறீங்களே.. அந்த டிரைவர் தம்பி.. நாளபின்ன என்னை மதிப்பானா..? ஒரு கைவேலை சொன்னா காதுகொடுத்துதான் கேட்பானா.?"

"இங்க பாருங்க.. உங்கள கட்டிகிட்டு வந்த காலத்துல.. எங்கேயாவது ஊரசுத்திகிட்டு.. போஸ்டர் ஒட்டிகிட்டு.. தலைய சொறிஞ்சி தலைவர்கள்கிட்ட வாங்கிட்டு வந்து தந்த ஐஞ்சு ரூவாயிலயே குடும்பம் நடத்தி குழந்தைகளை வளர்த்து.. அதுலயும் அம்பது காசு மிச்சம் பிடிச்சு.. வாழ்ந்ததுல தான்.. இந்த வீடு. வாசல்..தோட்டம்.. தொரவு.. காரு எல்லாம்.. தெரிஞ்சுக்குங்க.."

"சரி.. சரி.. கேட்டதுக்கு பதில சொல்லு.. மண்டையே வெடிச்சுடும் போல இருக்கு.."

"ஏங்க.. நான் ஐநூறு செட் வாங்கினது உண்மைதான்... ஆயிரத்து அறுநூத்தி சொச்சம் வீடுகளுக்கு விநியோகம் பண்ணினதும் உண்மைதான்.. எப்படின்னா.. முதல்நாள் ராத்திரி பத்துமணிக்கு மேல வீடுவீடா வேட்டி சேலைகளை விநியோகம் பண்ணினோம்.. விடியற்காலையில நம்ம நாலு ரோடு முக்கு இலுப்பத்தோப்புல டெண்ட் போட்டு தங்கியிருக்காங்களே.. பிளாஸ்டிக் வாளி.. குடம் வியாபாரிங்க.. அவங்களை அந்த தெருவுக்கு அனுப்பி.. வாளி.. டப்பு.. குடம்னு கொடுத்து புடவை வேட்டிகளை வாங்கிட்டு வரவச்சோம்.. அவங்களுகிட்ட இருந்து செட் முந்நூறுக்கு திருப்பி வாங்கிகிட்டோம்.. அவங்க வியாபார லாபம் போக.. செட்டுக்கு நூறு கெடைச்சா சும்மா இருப்பாங்களா.. அதுவுமில்லாம நாம விநியோகம் பண்ணினதெல்லாம் கட்சிக்கொடி கறை போட்ட துணிங்க.. அதை எல்லோரும் பொது தேவைகளுக்கு கட்டிகிட்டு திரிய முடியாது.. அதனால குடுத்துட்டு பிளாஸ்டிக் வாளியோ.. குடமோ வாங்கிடுவாங்க...இப்படி மாத்தி மாத்தி ரெண்டு பஞ்சாயத்துகளுக்கும் விநியோகம் பண்ணியாச்சு.. என்னை போய் தப்பா நெனச்சுட்டீங்களே... மிச்சம் பிடிச்ச காசுல நாலு கல்யாண வீடுகளுக்கும்.. ரெண்டு கோயில் திருவிழாக்களுக்கும் தாராளமா மொய் செஞ்சு அதிஷ்ட காத்தை நம்ம பக்கம் திருப்பியிருக்கேன்... கழுதைக்கு வாக்கப்பட்ட நான் கணைக்காம காலம் தள்ள முடியுமா.?!"நேரம் பார்த்து இடித்த மனைவியை பார்த்து..'ஜாடிக்கேத்த மூடி.. சரியான ஜோடி" என்று பூரிப்படைந்தார் கவுன்சிலர் வேட்பாளர் கண்ணப்பன்.*

க.குமாரகுரு,
மயிலாடுதுறை



# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*டாக்டர்: காலையில என்னம்மா சப்பிட்ட?*

*பெண்: பர்கர், பீட்சா, சாண்ட்வெஜ் சாப்பிட்டேன்*

*டாக்டர்: இங்க பாருமா இது வாட்ஸப்போ, இன்ஸ்டகிராமோ இல்லை. இது ஹாஸ்பிடல். உண்மையை சொல்லு.*

*பெண்: சாரி டாக்டர்..பழைய சோறும் கருவாட்டு குழம்பும் சார்..*



# தினம் ஒரு சமையல்



## திருக்கை கருவாடு கிரேவி

தேவையான பொருட்கள்:

*திருக்கை கருவாடு -100 கிராம்தி*
*பெரிய வெங்காயம் -1*
*தக்காளி -2*
*பச்சை மிளகாய் -2*
*மிளகாய் தூள் -2 ஸ்பூன்*
*மல்லித் தூள் -ஒரு ஸ்பூன்*
*எண்ணை -தேவையான அளவு*
*கடுகு உளுந்து சீரகம் சோம்பு -ஒரு ஸ்பூன்*
*கருவேப்பிலை -தேவையான அளவு*
*தேங்காய் அரைத்தது -ஒரு ஸ்பூன்*

செய்முறை:



தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளவும்

கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி கருவாட்டை நன்கு வதக்கவும் எடுத்து வைத்துக்கொள்ளவும் தனியாக

மறுபடியும் கடாயில் எண்னை ஊற்றி சீரகம் சோம்பு சேர்த்து கடுகு உளுந்து சேர்த்து கொதிவந்தவுடன் கருவேப்பிலை சேர்த்து வதக்கவும் பிறகு பொடியாக நறுக்கிய பெரிய வெங்காயத்தை சேர்க்கவும்

பிறகு வெங்காயம் வதங்கியதும் தக்காளியை சேர்க்கவும் வதங்கிய பிறகு 2 மிளகாய்தூள் ஒரு ஸ்பூன் மல்லித் தூள் சேர்த்து வதக்கவும்

பிறகு அதில் தேங்காய் அரைத்தது ஒரு ஸ்பூன் சேர்த்து நன்கு கிளறி இறக்கவும் சூடான சுவையான கருவாடு தொக்கு அல்லது கருவாடு கிரேவி ரெடி

# நாகலிங்கம் பயன்கள்



நாகலிங்கம் (COUROUPITA GUIANENSIS) மரம், சிவனுக்கு உகந்த பூக்களுக்காகவும், மருத்துவக் குணங்களுக்காகவும் வழிபடப்படும் ஒரு புனிதமான மரம். இதன் இலைகள், பூக்கள், மற்றும் காய்கள் கிருமி நாசினியாகவும், தோல் நோய்களைக் குணப்படுத்தவும், கால்நடைத் தீவனமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இது நிழல் தரும் மரமாகவும் வளர்க்கப்படுகிறது.

நாகலிங்க மரத்தின் முக்கிய பயன்கள்:

மருத்துவப் பயன்கள்:

தோல் நோய்கள்: இலைகளை அரைத்து பூசுவதன் மூலம் சொரி, சிரங்கு, படை மற்றும் படர்தாமரை போன்ற தோல் நோய்கள் குணமாகும்.

புண் ஆற்றுதல்: பூவின் லிங்கம் போன்ற பகுதியை அரைத்துப் பூசினால் புண்கள் விரைவாக ஆறும்.

வயிற்று உபாதைகள்: இதன் பூவிலிருந்து எடுக்கப்படும் தைலம், குளிர்காலத்தில் ஏற்படும் வயிற்று உபாதைகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

பயன்பாட்டு பயன்கள்:

உரம்: இதன் இலைகள் துரிதமாகத் துளிர்க்கும் தன்மையுடையவை, எனவே தழையெருவாகப் பயன்படுகின்றன.

கால்நடைத் தீவனம்: இதன் கனிகள் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பொருளாதார பயன்: மரக்கட்டை வேளாண்மைக் கருவிகள் செய்வதற்குப் பயன்படுகிறது.

ஆன்மீகப் பயன்:

சிவபெருமானுக்கு உகந்த பூவாகக் கருதப்பட்டு, கோயில் வளாகங்களில் சிறப்பாக வழிபடப்படுகிறது. இந்த மரம் "கனன்பால்" (CANNON BALL TREE) என்றும் அழைக்கப்படுகிறது.

# ஈரானும், இஸ்ரேலும் 'முஸ்தபா முஸ்தபா' பாடல் பாடி ஒன்னா சேரணும் - நடிகர் சதீஷ்





நடிகர் சதீஸ் நடிப்பில் பிரவீன் சரவணன் இயக்கத்தில் உருவான முஸ்தபா முஸ்தபா படம் நேற்று திரையரங்குகளில் வெளியானது.

தனியார் தொலைக்காட்சி சேனலில் பணியாற்றும் சதீஷ், டாக்டராக இருக்கும் மோனிகா சின்னகொட்லாவை காதலிக்கிறார். இரு குடும்பங்களும் இந்த காதலை ஏற்றுக்கொண்டு திருமண ஏற்பாடுகள் நடக்கிறது. திருமணத்திற்கு சில நாட்கள் மட்டுமே இருக்கும் நிலையில், சதீஷ் வேறு ஒரு பெண்ணுடன் நெருக்கமாக இருக்கும் வீடியோ இணையத்தில் வெளியாகிறது.

இந்த விஷயம் காதலிக்கு தெரிந்தால் திருமணம் நின்றுவிடும் என்ற பயத்தில், அந்த வீடியோவை எப்படியாவது இணையத்தில் இருந்து நீக்க முயற்சி செய்கிறார் சதீஷ். இறுதியில் சதீஷின் முயற்சி வெற்றி பெற்றதா? அந்த வீடியோவை யார் வெளியிட்டார்கள்? அதன் பின்னணி என்ன? என்பதே படத்தின் கதை.

இந்நிலையில், முஸ்தபா முஸ்தபா பட விழாவில் பேசிய நடிகர் சதீஷ், "முஸ்தபா முஸ்தபா என்ற தலைப்பு மாதிரி ஈரானும் இஸ்ரேலும் அமெரிக்காகவும் முஸ்தபா முஸ்தபா பாடல் பாடி ஒன்று சேரவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்" என்று தெரிவித்தார்.






சேலையில் கியூட்டாக சிவாத்மிகா வந்திருக்கும் புகைப்படங்களை பாருங்க. இன்ஸ்டாவில் அவருக்கு 5.6 லட்சம் ரசிகர்கள் இருக்கும் நிலையில் இந்த போட்டோக்களுக்கு லைக்குகள் குவிகிறது.

# வருங்கால கணவர் எப்படி இருக்கணும்... 100 ஏக்கர் நிலம், வீட்டு வேலைனு லிஸ்ட் போட்ட மீனாட்சி சவுத்ரி



தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகையான மீனாட்சி சவுத்ரி, தமிழில் 'கொலை', 'சிங்கப்பூர் சலூன்', 'தி கோட்' படங்களில் நடித்துள்ளார். தற்போது தெலுங்கில் வரிசைகட்டி படங்கள் நடித்து வருகிறார்.

இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் தனது வருங்கால கணவருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் குறித்து மீனாட்சி சவுத்ரி பேசியது வைரலாகி இருக்கிறது.

அதில் அவர், "என்னை திருமணம் செய்யும் நபர் குறைந்தது 100 ஏக்கர் நிலம் வைத்திருக்க வேண்டும். சமையல் செய்ய தெரிந்திருக்க வேண்டும், துணி துவைக்கவும் தெரிந்திருக்க வேண்டும். மேலும், துணிகளை இஸ்திரி செய்யவும் தெரிந்திருக்க வேண்டும். வீட்டிலுள்ள அனைத்து வேலைகளையும் கவனிக்க வேண்டும்" என கூறியிருக்கிறார்.

சிம்பிளாக சொல்லணும்னா... அம்மணி வீட்டோட மாப்பிள்ளையை எதிர்பார்க்கிறார் போலும்.

# "ஒன்பதாம் இடத்தில் குரு"

ராஜா திடீரென்று விழித்துப் பார்த்தான். புதருக்கு அடியில் கிடந்தான். மெல்ல மெல்ல அவனுக்கு நினைவு வந்தது. நேற்று இரவு நடந்ததை நினைத்துப் பார்த்தான். வேலை முடிந்து சிவாவும் ,ராஜாவும் பஸ் ஸ்டாப்பில் ,பஸ் ஸுக்காக காத்துக் கொண்டு நின்றிருந்தார்கள். பக்கத்தில் ஒரு பழைய வீடு ரொம்ப நாளா பூட்டிக் கிடந்தது. காம்பவுண்டில் உள்ளே இருவர் பேசும் குரல் கேட்டது. ராஜா உடனே சுவற்றுக்கு அருகே சென்று ஒட்டுக் கேட்டான் .அதில் ஒருவன் அந்த புளிய மரத்தின் பின்னால் தான் புதையல் உள்ளது. அதை எப்படியாவது எடுத்து விட வேண்டும் என நான் ஆறு மாதமாய் முயற்சி செய்கிறேன்.ஆனால் எடுக்க முடியவில்லை. பஸ் ஸ்டாப் பக்கத்தில் உள்ளதால் மக்கள் நடமாட்டம் இரவு 10 மணி வரை உள்ளது. நாளை இரவு எப்படியாவது நாம் இதை எடுத்து விட வேண்டும் .இருட்டில் இடம் தெரியாது. நாளைக்கு அமாவாசை வேறு .ஆதலால் ஒரு குச்சியை இப்போது சொருகிவிடலாம் நடு இரவு வந்து நாம் தோண்டி புதையலை எடுத்துக் கொள்ளலாம் என்று திட்டம் போட்டனர் .இது ராஜாவின் காதில் விழுந்தது. ராஜா உடனே சிவாவிடம் சொல்லி அவர்களுக்கு முன் நாம் அந்த புதையலை எடுத்து விடலாம் என்றான். சிவாவும் சரி என்றான். அன்று இரவு 12 மணிக்கு இருவரும் வந்து மதில் சுவர் மீது ஏறி உள்ளே குதித்து, புளிய மரத்தின் அருகே குச்சி இருந்த இடத்தில் கொஞ்சம் ஆழமாக தோண்டியதும் டங்.. டங் என்று சத்தம் கேட்டது. கையில் தொட்டுப் பார்த்தார்கள் ஒரு சொம்பு இருந்தது. ஆர்வத்துடன் மீண்டும் பள்ளம் தோண்டி மண்ணிலிருந்து அதை எடுத்து பார்த்தார்கள். தகடால்மூடி இருந்தது அந்த மூடியை கல்லால் உடைத்தார்கள் .அதன் உள்ளே இன்னும் ஒரு சிறிய சொம்பு இருந்தது அதையும் உடைத்தார்கள். அதில் கொஞ்சம் பழைய காலத்து தங்க நாணயம் இருந்தது. இருவருக்கும் சந்தோஷம். ஆளுக்கு பாதி பிரித்து எடுத்துக் கொள்ளலாம் என்று பேசிக் கொண்டிருந்த சமயம், மேலே இருந்து புளிய மரத்தின் கிளை ஒன்று முறிந்து ராஜாவின் மேலே விழுந்தது. உடனே அவன் வலியால், அய்யோ !!அம்மா!! என்று கத்தினான். அப்பொழுது தான் 10 மணிக்கு வர வேண்டிய பஸ் லேட்டாக வந்து நின்றது .பஸ் லைட்டின் வெளிச்சத்தில் இவர்கள் உள்ளே இருப்பதை, பஸ்ஸில் இருந்தவர்கள் பார்த்து விட்டார்கள். திருடன்.. திருடன்.. என்று கத்திக் கொண்டே பஸ்ஸிலிருந்து சிலர் இறங்கி வந்து இவர்களைப் பிடிக்க வந்தனர். மாட்டிக்கொள்ள போகிறோமோ? என பயந்து ராஜா பின்பக்கமாக ஓடினான். அங்கிருந்த சுவர் மீது ஏறி குதித் தான் அங்கே புதர் ஒன்று இருந்தது. பயத்தினால் அங்கேயே ஒளிந்து கொண்டான். சிவா கையில் இருந்த தங்க காசை தன் சட்டையில் வைத்து கட்டி சுவற்றின் பின்னே தூக்கி வீசினான். இவன் ஏறுவதற்குள் ஊரார் இவனை பிடித்து அடி.. அடி ..என அடித்தார்கள். பின்னர் அவன் கையில் ஒன்றும் இல்லை என தெரிந்ததும் மிரட்டி விட்டு விட்டார்கள். அவனும் வலியுடன், வீட்டிற்கு விட்டால் போதும் என்று ஓடிவிட்டான். ராஜா பயத்தில் அப்படியே தூங்கிவிட்டான். இப்பொழுது காலையில் கண் முழித்தான் .அவன் அருகில் சிவாவின் சட்டை சுற்றி பந்து போல் இருப்பதை பார்த்தான். மெல்ல பிரித்துப் பார்த்தான். அதில் தங்க காசுகள் இருந்தது .அப்பொழுது தான் அவனுக்கு புரிந்தது .அந்த சட்டையை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடி வந்தான். காலையில் வரும் முதல் பஸ், அந்த பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றது .உடனே அதில் ஏறி வெளியூருக்கு சென்று விட்டான். இதுதான் "அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி," "ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு" என்பதா? முன்னோர்கள் சொன்னது சரி தானே.






- எம் .எல். பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

# தினம் ஒரு தலைவர்கள் ஆபித் ஹசன் சப்ரானி வரலாறு

ஆபித் ஹசன் சப்ரானி 11 ஜூன் 1911 – 5 ஏப்ரல் 1984) இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய ஒரு அதிகாரி ஆவார். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய வெளியுறவு துறையின் மூலம் இந்திய தூதராக பல நாடுகளில் பணியாற்றினார்.






பிறப்பும் கல்வியும்

ஹைதராபாத்தில் காலனித்துவ எதிர்ப்பு குடும்பத்தில் பிறந்த ஆபித் ஹசன், ஜெர்மனிக்கு சென்று பொறியாளராக பயிற்சி பெற்றார்.

இந்திய தேசிய இராணுவத்தில்

இரண்டாம் உலகப் போர் நடைபெறத் துவங்கிய காலகட்டத்தில் ஜெர்மனியில் மாணவராக இருந்த ஆபித் ஹசன், அங்கிருந்த இந்தியக் கைதிகளிடம் உரையாற்றிய சுபாஷ் சந்திர போஸ்ஸின் பேச்சில் ஈர்க்கப்பட்டார். போஸை சந்தித்து சுதந்திர இந்தியப் படையணியில் சேர்ந்தார். போஸ் ஜெர்மனியில் இருந்து ஆதரவு திரட்டும்போது போஸின் தனிப்பட்ட செயலாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.



ஜெர்மனியில் இருந்து 1943 இல் தென்கிழக்கு ஆசியாவிற்கு போஸ் மேற்கொண்ட பயணத்தில் (ஜெர்மன் யு-போட் யு -80) இல் போஸுடன் பயணம் செய்தார். இந்திய தேசிய இராணுவத்தில் (ஐ.என்.ஏ) பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டார். மேலும் தென்கிழக்கு ஆசிய அளவில் நேதாஜியின் பிரச்சாரங்களின் போதும் உடன் பயணித்தார், ஹசன் இந்திய தேசிய இராணுவத்தில் ஒரு மேஜராகவும் உயர்ந்தார். இச்சமயத்தில்தான் அவர் குங்குமப்பூவின் புனித இந்து நிறத்திற்குப் பிறகு "சப்ரானி" ஐ தனது பெயருக்கு வகுப்புவாத நல்லிணக்கத்தின் அடையாளமாக ஏற்றுக்கொண்டார்.

ஜெய் ஹிந்த்

வீரர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது அவரவர் மதத்தின் அடிப்படையில், இனத்தின் அடைப்படையில் வாழ்த்து கூறிவந்தனர். வீரர்கள் ஒன்றாக நின்று ஒருங்கிணைந்த இந்தியாவுக்காக போராட வேண்டும் அதற்கு பொதுவான ஒரு வார்த்தையை உருவாக்கும் பணியை ஆபிதிடம் போஸ் ஒப்படைத்தார். செண்பகராமன் பிள்ளை உருவாக்கிய இந்தியா வெல்க எனப் பொருள்படும் ஜெய் ஹிந்த் என்ற சொற்றொடரை இந்திய தேசிய இராணுவத்தினர் பயன்படுத்தப் பரிந்துரைத்தார்.

ஐஎன்ஏ வழக்குகள்

இரண்டாம் உலகப் போரின் முடிவில் இந்திய தேசிய இராணுவ உறுப்பினர்கள் பலரும் கைது செய்யப்பட்டு ஐஎன்ஏ வழக்குகளின் கீழ் விசாரிக்கப்பட்டனர், ஆபிதும் விசாரணையின் முடிவில் விடுவிக்கப்பட்டு இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பின்னர், 1946 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார்.

இந்திய தூதராக

பிரிவினைக்குப் பிறகு, ஹசன் ஹைதராபாத்தில் குடியேறத் தேர்ந்தெடுத்து, புதிய இந்திய வெளியுறவு சேவையில் சேர்ந்தார். எகிப்து, டென்மார்க் உள்ளிட்ட பல நாடுகளின் இந்தியத் தூதராகப் பணியாற்றியுள்ளார்.

இறப்பு

ஆபித் ஹசன் சஃப்ரானி 1984 இல் ஹைதராபாத்தில் இறந்தார்.

# பணமோசடி வழக்கு: ரிலையன்ஸ் நிறுவனத்தில் அமலாக்கத்துறை ரெய்டு



**மும்பை, மார்ச் 8:**

இந்தியாவில் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவர் அனில் அம்பானி. அனில் திருபாய் அம்பானி குழுமத்தின் தலைவரான இவர் ரிலையன்ஸ் பவர் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களை நடத்தி வருகிறார்.

இதனிடையே, ரிலையன்ஸ் பவர் உள்பட ரிலையன்ஸ் குழுமத்தின் பெயரில் பெற்ற கடன், சட்டவிரோதமாக மற்ற நிறுவனங்களுக்கு மாற்றம் செய்துள்ளதாக அனில் அம்பானி மீது குற்றச்சாட்டு எழுந்தது.

விசாரணையில், அனில் அம்பானி ரூ.40 ஆயிரம் கோடி பண மோசடி செய்து விட்டதாக சிபிஐ வழக்குப்பதிவு செய்துள்ளது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடுப்பு சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையும் வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக அனில் அம்பானி வீடு, அலுவலகம் உட்பட 35க்கும் மேற்பட்ட இடங்களில், அமலாக்கத்துறை சோதனை நடத்தியது.

மேலும், அனில் அம்பானிக்கு நோட்டீஸ் அனுப்பிய அமலாக்கத்துறை அவரிடம் விசாரணை நடத்தியது. மேலும், பணமோசடி வழக்கு தொடர்பாக அனில் அம்பானியில் ரூ. 15 ஆயிரத்து 700 கோடி சொத்துக்களை அமலாக்கத்துறை ஏற்கனவே முடக்கியுள்ளது.

இந்நிலையில், பணமோசடி வழக்கு தொடர்பாக ரிலையன்ஸ் பவர் நிறுவனம் மற்றும் தொடர்புடைய இடங்களில் இன்று அமலாக்கத்துறை அதிரடி சோதனை நடத்தி வருகிறது.

மும்பை, ஐதராபாத் ஆகிய 2 பகுதிகளில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

# மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான 4 டிஜிட்டல் தளங்கள் அறிமுகம்



**புதுடெல்லி, மார்ச் 8:**

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான 4 டிஜிட்டல் தளங்கள் மற்றும் சின்னங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் நேற்று அறிமுகம் செய்தார்.

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த 2011-ம் ஆண்டில் நாடு தழுவிய அளவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் பிறகு 2021ம் ஆண்டில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரோனா பெருந்தொற்று காரணமாக கணக்கெடுப்பு பணி தள்ளிவைக்கப்பட்டது. இந்த சூழலில் நாடு முழுவதும் இரு கட்டங்களாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது. இதன்படி ஏப்ரல் 1-ம் தேதி முதல் செப்டம்பர் 30 வரை வீடுகள், கட்டிடங்கள், வீட்டில் உள்ள வசதிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன. இதன்பிறகு அடுத்த ஆண்டு பிப்ரவரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்படும். அப்போது ஒவ்வொரு நபரின் சமூக, பொருளாதார தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன. இந்த சூழலில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான டிஜிட்டல் தளங்கள், சின்னங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் நேற்று அறிமுகம் செய்தார். முதல் முறையாக டிஜிட்டல் முறையில் மக்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இதற்காக 4 டிஜிட்டல் தளங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

வீடுகள், கட்டிடங்கள் தொடர்பான பட்டியலை தயாரிக்க புதிதாக செயலி உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் நாடு முழுவதும் பல்வேறு புவியியல் பகுதிகளை உறுதி செய்து, செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் முறையில் வீடுகள், கட்டிடங்களின் பட்டியலை தயாரிக்க முடியும்.

# நாடாளுமன்ற வாயில்களில் 10 கி.மீ. வேகம் மட்டுமே! எம்.பி.க்களுக்கு அறிவுறுத்தல்!

**புதுடெல்லி, மார்ச் 8:**

நாடாளுமன்ற வாயில்களில் நுழையும்போது, அதிகபட்சமாக 10 கி.மீ. வேகத்தில்தான் கார் இயக்கப்பட வேண்டும்; இல்லையெனில், உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு சாதனங்கள் தாமாக செயல்பட்டு வாகனத்துக்கு சேதம் விளைவிப்பதுடன், உள்ளே இருப்பவரும் காயமடைய வாய்ப்புள்ளது என்று எம்.பி.க்களுக்கு நாடாளுமன்ற பாதுகாப்புப் பணி அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9-ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், நாடாளுமன்ற வளாகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான நாடாளுமன்ற பாதுகாப்புப் பணி அமைப்பு, எம்.பி.க்களுக்கான புதிய அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

அதில், 'நாடாளுமன்ற நுழைவாயில்களில் உள்ள உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு சாதனங்களைக் கடந்து செல்லும் வரையில் காரின் வேகம் 10 கி.மீ.க்கு மிகாமல் பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், டயர்களை சேதப்படுத்தி, தடையை உருவாக்கக் கூடிய அமைப்புகள் தாமாக செயல்பட்டுவிடும். இதனால், வாகனம் சேதமடைவதுடன், உள்ளே இருப்பவரும் காயமடைய வாய்ப்புள்ளது.

இதேபோல், தானியங்கி தடுப்பை கடந்து செல்லும்போது, வாகனங்களுக்கு இடையே குறைந்தபட்சம் 5 அடி இடைவெளி கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்த அமைப்பு, ஒரு நேரத்தில் ஒரு வாகனத்தை மட்டுமே அனுமதிக்கும்.

ஒருவேளை தானியங்கி தடுப்பு மீது எதிர்பாராதவிதமாக மோதிவிட்டால் வாகனத்தை ஓட்டுநர் உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கேரளா: பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியருக்கு 18 ஆண்டு சிறை



**திருவனந்தபுரம், மார்ச் 8:**

கேரளாவில் 2013-ல் டியூஷன் படிக்க வந்த சிறுமியை ஓராண்டுக்கு மேலாக ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்ததால் மன நோய்க்கு ஆளானார்.

பின்னர் பிளஸ்-2, நீட் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று எம்பிபிஎஸ் படிப்பில் சேர்ந்தபோது, டியூஷன் ஆசிரியரைப் போன்ற ஒருவரைப் பார்த்துவிட்டு 2024-ல் மீண்டும் அவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டது. அதற்கான சிகிச்சையும் அவருக்கு அளிக்கப்பட்டது.

அப்போதுதான் பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் விவரம் தெரிய வந்து சிகிச்சை அளித்த டாக்டர் மூலம் போலீஸில் புகார் அளிக்கப்பட்டது.

போலீஸார் விசாரணை நடத்தி 57 வயதான அந்த ஆசிரியரைக் கைது செய்தனர். இந்த வழக்கில் ஆசிரியருக்கு 18 ஆண்டு சிறை தண்டனை, ரூ.35,000 அபராதம் விதித்து திருவனந்தபுரம் விரைவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69% குறைந்தது




**புதுடெல்லி, மார்ச் 8:**

இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69 சதவீதம் அளவுக்கு குறைந்து உள்ளது.

கடந்த 2017 முதல் 2021-ம் ஆண்டு வரை அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவி வகித்தார். அப்போது அமெரிக்காவில் வசிக்கும், பணியாற்றும் வெளிநாட்டினர் மீது மிகப் பெரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த ஆண்டு ஜனவரியில் ட்ரம்ப் 2-வது முறையாக அதிபராக பதவியேற்றார். அப்போது முதல் இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினர் மீது அவர் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் நாடு கடத்தப்பட்டனர். அமெரிக்காவில் பணியாற்ற வழங்கப்படும் எச்1 பி விசா கட்டணம் ரூ.88 லட்சமாக உயர்த்தப்பட்டது. அமெரிக்காவில் கல்வி பயில வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் எப்1 விசா கட்டணம் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டு உள்ளது. மேலும் விசா நடைமுறைகளும் கடுமையாக்கப்பட்டு உள்ளன.

கடந்த 2018-ல் 26,506 இந்திய மாணவர்களுக்கு எப்1 விசாக்கள் வழங்கப்பட்டன. கடந்த 2019-ல் 26,247 விசாக்கள் விநியோகிக்கப்பட்டன. கரோனா தொற்று காரணமாக கடந்த 2020-ம் ஆண்டில் 114 இந்திய மாணவர்களுக்கு மட்டுமே எப்1 விசா வழங்கப்பட்டது.

கடந்த 2021-ம் ஆண்டில் 40,194 பேர், 2022-ம் ஆண்டில் 62,229 பேர், 2023-ம் ஆண்டில் 72,027 பேர், 2024-ம் ஆண்டில் 41,336 இந்திய மாணவர்கள் எப்1 விசாக்களை பெற்றனர். ஆனால் கடந்த 2025-ம் ஆண்டில் 12,776 இந்திய மாணவர்களுக்கு மட்டுமே எப்1 விசா வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 2024-ம் ஆண்டை ஒப்பிடும்போது 2025-ம் ஆண்டில் இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்க கல்வி விசா 69 சதவீதம் வரை குறைந்து உள்ளது.

# அமெரிக்காவின் மிரட்டல் எத்தனை நாள்களுக்குத் தொடரும்?: காங்கிரஸ்

**புதுடெல்லி, மார்ச் 8:**

காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பக்கத்தில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், 'அமெரிக்க அதிபர் டிரம்ப் தற்போது புதிய விளையாட்டை தொடங்கியுள்ளார். இந்தச் சூழலில், ரஷிய அதிபர் புதினிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்து கொள்ளலாம் என இந்தியாவிலுள்ள தனது நண்பருக்கு டிரம்ப் தற்காலிக அனுமதியை அளித்துள்ளார். அமெரிக்காவின் இந்த மிரட்டல் எத்தனை நாள்களுக்குத் தொடரும்?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். பிரதமரின் ராஜதந்திரத்துக்கான வெற்றி - பாஜக: ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்துகொள்ளும் வகையில் இந்தியா மீதான கட்டுப்பாடுகளுக்கு அமெரிக்கா 30 நாள்கள் தற்காலிக விலக்கு அளித்திருப்பது பிரதமர் நரேந்திர மோடியின் ராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றி என்று பாஜக பெருமிதம் தெரிவித்தது.

இதுகுறித்து பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் இந்தியாவின் முக்கிய கச்சா எண்ணெய் வள ராஜதந்திரம் மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு என்ற பொய்யான செய்திகளைப் பரப்பி மக்களிடையே பீதியை ஏற்படுத்திய இந்திய விரோத ராகுல் காந்தி முகத்திலும், காங்கிரஸ் மீதும் பெரிய முட்டை விழுந்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

# ராஜஸ்தானில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 3.5 ஆக பதிவு

**புதுடெல்லி, மார்ச் 8:**

ராஜஸ்தானின் சிகார் பகுதியில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. காலை 6.32 மணியளவில் ரிக்டர் அளவில் 3.5 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 27.42 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 75.37 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

# திருப்பதி தேவஸ்தான முழு நேர நிர்வாக அதிகாரியாக ரவிசந்திரா பதவியேற்பு



**திருமலை, மார்ச் 8:**

திருப்பதி தேவஸ்தானத்தில் ஜெகன்மோகன் ஆட்சி காலத்தில் நடந்த கலப்பட நெய் விவகாரத்தில் சம்மந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கலாம் என ஆந்திர அரசுக்கு சிபிஐ விசாரணை குழு பரிந்துரை செய்தது. அதன்பேரில், தேவஸ்தான நிர்வாக அதிகாரி அனில்குமார் சிங்கால் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவரை தொடர்ந்து, முதல்வர் அலுவலகத்தில் முக்கிய பொறுப்பில் இருந்த ஐஏஎஸ் அதிகாரி ரவிசந்திராவை அரசு தற்காலிக நிர்வாக அதிகாரியாக நியமனம் செய்தது. சமீபத்தில் அவரை நிரந்தர நிர்வாக அதிகாரியாக பணி நியமனம் செய்து உத்தரவிட்டது.

அதன்பேரில் நேற்று காலை 7.44 மணிக்கு ஏழுமலையான் கோயிலில் பதவி பொறுப்பேற்றார். முன்னதாக ரவிசந்திரா தம்பதியினர் ஏழுமலையானை தரிசனம் செய்தனர். அவர்களுக்கு தேவஸ்தானம் சார்பில் கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கையா சவுத்ரி தீர்த்த பிரசாதங்கள், மற்றும் சுவாமியின் திரு உருவப்படத்தையும் வழங்கி கவுரவித்தார்.

# போர் காரணமாக மருந்து ஏற்றுமதி பாதிப்பு: நிறுவனங்களுக்கு ரூ.5,000 கோடி இழப்பு அபாயம்



**புதுடெல்லி, மார்ச் 8:**

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் இறக்குமதி, ஏற்றுமதியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அச்சுறுத்தியிருப்பதே இதற்கு காரணம். ஏனெனில், மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான முக்கிய கடல் பாதையாக ஹார்முஸ் ஜலசந்தி உள்ளது.

மத்திய கிழக்கில் 3 நாடுகளுக்கு இடையிலான போர் காரணமாக, உலகளாவிய சரக்குகளுக்கான ஏற்றுமதி, இறக்குமதி செலவுகள் அதிகரித்துள்ளன. இதுகுறித்து இந்திய மருந்து ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் தலைவர் நமித் ஜோஷி கூறியதாவது: வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (ஜிசிசி) உறுப்பு நாடுகள் இந்திய மருந்து நிறுவனங்களின் மொத்த ஏற்றுமதியில் 5.58 சதவீதத்தைக் கொண்டுள்ளன. மேற்கு ஆசியா மற்றும் வடஆப்பிரிக்கா பிராந்தியத்திற்கான மருந்து ஏற்றுமதியின் மதிப்பு 2024-25 நிதியாண்டில் 1,749.6 மில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சவுதி, ஓமன், குவைத் மற்றும் ஏமன் போன்ற முக்கிய சந்தைகள் மலிவு விலையில், பொதுவான மருந்துகளை வாங்குவதற்கு இந்தியாவை பெரிதும் நம்பியுள்ளன. ஜோர்டான், குவைத் மற்றும் லிபியா போன்ற வளர்ந்து வரும் சந்தைகளுக்கான ஏற்றுமதியும் சமீப காலமாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் இந்திய மருந்து ஏற்றுமதியை பாதிக்கலாம் என கூறப்படுகிறது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி இரண்டிற்கும் சரக்கு வரியும் இரண்டு மடங்காகி உள்ளது. இவை, மருந்து ஏற்றுமதி நிறுவனங்களை மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றன. மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக மார்ச் மாதத்தில் ஏற்றுமதிகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டால், மருந்து தொழில் துறை 5,000 கோடி ரூபாய் வரை இழப்புகளை சந்திக்க நேரிடும். மருந்து ஏற்றுமதியாளர்களுக்கான சரக்கு நிவாரணம், மானியங்கள் மற்றும் தளவாட ஆதரவு போன்ற நடவடிக்கைகளை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசின் உதவியால் மட்டுமே ஏற்படவிருக்கும் இழப்பு குறையும். இவ்வாறு நமித் ஜோஷி தெரிவித்துள்ளார்.

# ஆந்திராவில் தம்பதிகளுக்கு ரூ.25,000.. அரசின் அதிரடி அறிவிப்பால் பெற்றோர் குதூகலம்..!

**அமராவதி, மார்ச் 8:**

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் குறைந்து வரும் பிறப்பு விகிதம் மற்றும் அதிகரித்து வரும் முதியோர் மக்கள்தொகை ஆகிய சவால்களைச் சமாளிக்க, முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு ஒரு புரட்சிகரமான மக்கள்தொகை மேலாண்மைக் கொள்கையை அறிவித்துள்ளார். இந்தக் கொள்கையின் கீழ், அதிக குழந்தைகளைப் பெற்றெடுக்கும் தம்பதிகளுக்குப் பல்வேறு நிதியுதவிகள் மற்றும் சலுகைகளை அரசு வாரி வழங்கி உள்ளது.

* இரண்டாவது அல்லது மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்கும் தம்பதிகளுக்குத் தலா ரூ. 25,000 ஒருமுறை நிதியுதவியாக வழங்கப்படும். * மூன்றாவது குழந்தையின் ஊட்டச்சத்து மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காக, அக்குழந்தைக்கு 5 வயது ஆகும் வரை மாதம் ரூ. 1,000 வீதம் மொத்தம் 60 மாதங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.

* 18 வயது வரை குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்க ஏற்பாடு செய்யப்படும். மக்கள்தொகை பெருக்கத்தை ஊக்குவிக்க அரசு ஊழியர்களுக்குக் கூடுதல் சலுகைகளை முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

*தாய்மார்களுக்கு 12 மாதங்கள் (ஒரு வருடம்) சம்பளத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு. *தந்தைமார்களுக்கு 2 மாதங்கள் தந்தைவழி விடுப்பு. * கூடுதல் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகளில் முன்னுரிமை அளிப்பதற்கான சட்டத் திருத்தங்களும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

ஆந்திராவின் மொத்தக் கருவுறுதல் விகிதம் (TOTAL FERTILITY RATE - TFR) தற்போது 1.5 ஆகக் குறைந்துள்ளது. இது மக்கள்தொகையை நிலையாக வைத்திருக்கத் தேவையான 2.1 என்ற அளவை விட மிகவும் குறைவு. இதனால், 2047-ம் ஆண்டிற்குள் ஆந்திரா ஒரு "வயதான மாநிலமாக" மாறும் அபாயம் உள்ளதால், இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முதல்-மந்திரி இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

# ஈரான் போர்க் கப்பல் மூழ்கடிப்பு: இந்தியா மீதான குற்றச்சாட்டுக்கு மத்திய அரசு மறுப்பு

**புதுடெல்லி, மார்ச் 8:**

ஈரான் போர்க் கப்பலை அமெரிக்கா தாக்கி அழித்த விவகாரத்தில் இந்தியா மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை மத்திய அரசு உறுதியாக மறுத்துள்ளது.

இலங்கை கடல்பரப்பு அருகே சர்வதேச கடல் எல்லையில் கடந்த 4-ஆம் தேதி ஈரானின் 'ஐரிஸ் டெனா' போர்க் கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் குண்டு வீசி மூழ்கடித்தது. இதில் 87 ஈரான் கடற்படை வீரர்கள் உயிரிழந்தனர். 37 பேரை இலங்கை கடற்படையினர் மீட்டனர். விசாகப்பட்டினத்தில் கடந்த மாத இறுதியில் இந்தியா நடத்திய பல்வேறு நாடுகள் பங்கேற்ற கடற்படைப் பயிற்சியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது. பிப். 25-ஆம் தேதி இந்திய கடல் எல்லையைவிட்டு வெளியேறிவிட்ட ஈரான் போர்க்கப்பலில் ஆயுத தளவாடங்கள் எதுவும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைக்குத் தெற்கே 40 கடல் மைல் (சுமார் 74 கி.மீ.) தொலைவில் இந்திய பெருங்கடலில் அந்தப் போர்க்கப்பல் தகர்க்கப்பட்டது.

எனினும், இதை முன்வைத்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மத்திய அரசை வன்மையாகக் கண்டித்தன. இந்தியாவின் மிக அருகில் வந்து அமெரிக்கா தாக்குதல் நடத்திய நிலையில், பிரதமர் மோடி அமைதி காப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார். தங்கள் நாட்டு கடல் எல்லையில் இருந்து பல நூறு கி.மீ. அப்பால் இருந்த போர்க் கப்பலை அமெரிக்கா தாக்கி அழித்ததற்கு உரிய விளைவுகளைச் சந்திக்கும் என்று ஈரான் ஏற்கெனவே எச்சரித்துள்ளது. இந்நிலையில், ஈரான் போர்க் கப்பல் குறித்து இந்திய கடற்படை அமெரிக்காவுக்கு உளவுத் தகவல் வழங்கியதாகப் பரப்பப்படும் தகவல் முற்றிலும் பொய்யானது,




# சென்னை: சீருடையுடன் மதுபோதையில் பெண்ணின் வீட்டுக்குள் நுழைந்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட காவலர் கைது



**சென்னை, மார்ச் 8:** பெண்ணின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்ற காவலர் கைது செய்யப்பட்டார். அவரை பணியிடை நீக்கம் செய்து காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

சேலம் மாவட்டம், மேட்டூர் பகுதியைச் சேர்ந்தவர் சூர்யா (28). சென்னை ஐஸ்ஹவுஸ் காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றி வருகிறார். கருத்து வேறுபாடு காரணமாக மனைவியை பிரிந்து வசித்து வருகிறார்.

இவர் நேற்று முன்தினம் மாலை போலீஸ் சீருடையில் ராயப்பேட்டை பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார். பின்னர் அங்கு தனியாக இருந்த 32 வயதுடைய பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்றதாக கூறப்படுகிறது.

காவலரை அந்த பெண் வீட்டுக்குள்ளே வைத்து வெளிப்புறமாக பூட்டிவிட்டு கூச்சலிட்டார். அதைக் கேட்டு அக்கம்பக்கத்தினர் திரண்டனர். மேலும் காவல் கட்டுப்பாட்டு அறைக்கும் தகவல் தெரிவித்தனர்.

போலீஸார் சம்பவ இடம் விரைந்து கதவைத் திறந்து காவலர் சூர்யாவை கைது செய்தனர். அப்போது அவர் மது போதையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக ஐஸ்ஹவுஸ் போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் வைரலானது. இதையடுத்து, உரிய விசாரணை நடத்த காவல் ஆணையர் உத்தரவிட்டார். அதன்படி விசாரணை நடத்தப்பட்டது. இதில் காவலர் சூர்யா அத்துமீறியது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவரை காவல் ஆணையர் அருண் பணியிடை நீக்கம் செய்து நேற்று உத்தரவிட்டார்.

"சம்பந்தப்பட்ட பெண் கள்ளச் சந்தையில் மது விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார். இது தொடர்பான சோதனைக்காகவே அப்பெண் வீட்டுக்குச் சென்றேன். வேறு எந்த நோக்கத்துடனும் அங்கு செல்லவில்லை" என காவலர் சூர்யா போலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், "அவர் அந்த பெண்ணிடம் 'நீ கணவரை பிரிந்தும், நான் மனைவியைப் பிரிந்தும் வாழ்கிறோம். நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வோம்' எனக் கூறிய படி பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்றுள்ளார். இதனாலேயே அவர் மீது காவல் ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார்" என போலீஸ் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# உரிய ஆவணமின்றி கொண்டுவரப்பட்ட ரூ.1.25 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி பறிமுதல்: ரயில்வே போலீஸார் நடவடிக்கை

**சென்னை, மார்ச் 8:** சென்டரல் ரயில் நிலையத்தில் உரிய ஆவணமின்றி கொண்டுவரப்பட்ட ரூ.1.25 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி மற்றும் பணத்தை ரயில்வே போலீஸார் பறிமுதல் செய்தனர்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்பு படையினர் வழக்கம்போல் நேற்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது நள்ளிரவு 12.10 மணியளவில் பெங்களூருவில் இருந்து சென்னை வந்த லால்பாக் எக்ஸ் பிரஸ் ரயில் பயணிகளிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது ஒருவரிடமிருந்து ரூ.47.52 லட்சம் மதிப்பிலான 288 கிராம் எடையுள்ள 4 தங்கக் கட்டிகள், ரூ.29.40 லட்சம் மதிப்பிலான 10 கிலோ எடைகொண்ட ஒரு வெள்ளிக்கட்டி ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இந்த பொருட்களுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் ரயில்வே போலீஸார் இவற்றை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டனர். அதில் தங்கம் கடத்தி வந்த நபர் கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பது தெரியவந்தது.

இதேபோல நேற்று மதியம் 1 மணியளவில் விஜயவாடாவில் இருந்து சென்ட்ரல் வந்த பினாகினி அதிவிரைவு ரயில் பயணிகளிடம் சோதனை செய்த போது பயணி ஒருவரிடம்இருந்து உரிய ஆவணங்களின்றி எடுத்துவரப்பட்ட ரூ.48.59 லட்சம் பணத்தை ரயில்வே போலீஸார் பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் அந்த நபர் ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்திக் என்பது தெரியவந்தது. இதையடுத்து பறிமுதல் செய்த பொருட்களையும், கடத்தலில் ஈடுபட்ட இருவரையும் ரயில்வே போலீஸார் வருமான வரித் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

# சென்னை | ஆங்கில மருத்துவம் பார்த்த மும்பை ஹோமியோபதி மருத்துவர் உதவியாளருடன் கைது

**சென்னை, மார்ச் 8:** ஹோமியோபதி படித்துவிட்டு, ஆங்கில மருத்துவம் பார்த்த மும்பை பெண், உதவியாளருடன் கைது செய்யப்பட்டார். சென்னை நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் பிரபலமான தனியார் உணவகம் உள்ளது.

அங்குள்ள அறை ஒன்றில் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையைச் சேர்ந்த பூனம் லலித் சர்மா (52) என்பவர் ஹோமியோபதி மருத்துவம் படித்துவிட்டு, காது தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்தியதோடு, அறுவை சிகிச்சைகளை செய்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து, சென்னையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கக அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். இதில் பூனம் லலித் சர்மா ஆங்கில மருத்துவம் படிக்காமல் அது தொடர்பான சிகிச்சை அளித்து வந்தது உறுதி செய்யப்பட்டது.

இதுகுறித்து அவர்கள் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து பூனம் லலித் சர்மா, அவருக்கு உதவியாகவும் இருந்து வந்த சவுகார்பேட்டையைச் சேர்ந்த ஷில்பா (44) ஆகிய இருவரைக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து ஆங்கில சிகிச்சை முறைக்கு பயன்படுத்தப்படும் ஊசிகள், மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று முன்தினம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# நாங்குநேரி இரட்டைக் கொலையில் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம்: அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க நீதிமன்றம் உத்தரவு



**மதுரை, மார்ச் 8:** நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் நடைபெற்ற இரட்டை கொலை வழக்கில் கைது எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது. இச்சம்பவத்தில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்யக் கோரி, 4-வது நாளாக உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாங்குநேரி அருகே கடந்த 2-ம் தேதி ஒரு கும்பல் சரமாரியாக அரிவாளால் வெட்டியதில், ஒடிசா தொழிலாளி திரிநாத் கட்டா மற்றும் பெரும்பத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி ஜான் ஆகிய 2 பேர் கொலை செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக, 7 பேரை போலீஸார் கைது செய்தனர். இந்நிலையில், மஞ்சங்குளம் மகாராஜன் என்பவர் நேற்று கைது செய்யப்பட்டார். இதனால், இச்சம்பவத்தில் கைதானவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது. மேலும் சிலரை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தை கண்டித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வழக்கில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்யும் வரை, உடலை வாங்க மறுத்து நேற்று 4-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதே வேளையில் ஒடிசா தொழிலாளி திரிநாத் கட்டாவின் உடல் ஏற்கெனவே அடக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. நீதிமன்றத்தில் முறையீடு இதனிடையே நாங்குநேரி சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் வழக்கறிஞர் ஆயிரம் கே.செல்வகுமார் ஆஜராகி, எந்தக் காரணமும் இல்லாமல் கொலை செய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளியின் குடும்பத்துக்குத் தேவையான நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும், கொலையாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிந்து விசாரிக்க வேண்டும் எனக் கோரினார்.

பின்னர் நீதிபதிகள், நாங்குநேரி விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு தொடர்பாக தகவல் பெற்று நீதிமன்றத்துக்குத் தெரிவிக்க அரசு வழக்கறிஞருக்கு உத்தரவிட்டனர்.

# மின்வாரிய கணினி சேவை மேம்பாட்டுப் பணிகள்: சென்னையில் இன்று ஆன்லைன் சேவைகள் நிறுத்தம்




**சென்னை, மார்ச் 8:** கணினி சேவை மேம்பாட்டுப் பணிகள் காரணமாக சென்னையில் இன்றும், நாளையும் (மார்ச் 7, 8) மின் கட்டணம் செலுத்துதல், மின் இணைப்பு விண்ணப்பம் உள்ளிட்ட ஆன்லைன் சேவைகள் நிறுத்தப்படுவதாக மின்வாரியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மின்வாரியம் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், மின்நுகர்வோர்களுக்கு மேம்பட்ட சேவைகளை வழங்கும் நோக்கில், கணினி சேவைகளை புதிய சர்வர்களுக்கு படிப்படியாக மாற்றும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த மேம்பாட்டுப் பணிகள் முதற்கட்டமாக சென்னை மண்டலத்தில் உள்ள சென்னை வடக்கு, சென்னை மத்தியம் மற்றும் சென்னை மேற்கு ஆகிய மின் பகிர்மான வட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

இதன் காரணமாக, இன்று முதல் 8-ம் தேதி இரவு 12 மணிவரை 2 நாட்களுக்கு மின் கட்டணத்தை ஆன்லைன் மற்றும் மின்கட்டண வசூல் மையங்கள் மூலம் செலுத்தும் சேவைகள் மற்றும் புதிய மின் இணைப்பு விண்ணப்ப சேவைகள் ஆகியவற்றை சென்னை மண்டலத்துக்கு உட்பட்ட பெரம்பூர், வியாசர்பாடி, தண்டையார்பேட்டை, பொன்னேரி, எழும்பூர், தி.நகர், அண்ணா சாலை, மயிலாப்பூர், அம்பத்தூர், ஆவடி, அண்ணாநகர் ஆகிய கோட்டங்களுக்கு உட்பட்ட மின்நுகர்வோர் மற்றும் பொதுமக்கள் பெற இயலாது.

மேலும் நுகர்வோருக்கு 2 நாட்களுக்கு கூடுதல் கால அவகாசம் வழங்கப்பட்டு மார்ச் 9-ம் தேதி வரையில் அபராதம் இன்றி மின்கட்டணம் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பகுதிகளில் உள்ள நுகர்வோர் தங்களது மின்கட்டணங்களை செலுத்துவதற்கும் புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பம் உள்ளிட்ட சேவைகளையும் முன்கூட்டியே திட்டமிட்டு செயல்பட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீலகிரியில் தமிழக பகுதியை உரிமை கொண்டாடும் கேரளம்: இரு மாநில போலீஸார் குவிப்பு




**பந்தலூர், மார்ச் 8:** பந்தலூர் அருகே தமிழக பகுதியை கேரள மாநிலம் உரிமை கொண்டாடி அறிவிப்பு பலகை வைத்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அறிவிப்பு பலகையை அகற்ற கோரியுள்ளதாக நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே தமிழக, கேரள எல்லையாக தாளூர் பகுதி உள்ளது. இங்குள்ள ஒரு பாலம் இரு மாநிலங்களையும் பிரிக்கிறது.

இந்நிலையில், இப்பகுதியில் கேரள மாநில பொதுப் பணி துறை சார்பில் கேரளா உங்களை வரவேற்கிறது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.

இதனால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. தமிழ்நாடு பகுதியை கேரள மாநிலம் சொந்தம் கொண்டாடுவதாகக் கூறி அப்பகுதி மக்கள் அங்கு திரண்டதாக பதற்றமான சூழல் ஏற்பட்டது. இதனால், இரு மாநில போலீஸாரும் அங்கு குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், மக்களிடம் வருவாய்த் துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். கடந்த 2018-ம் ஆண்டு தமிழக பகுதியில் கேரளம் சார்பில் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது. கேரள நெடுஞ்சாலை துறையினர் அப்பகுதி கேரளாவைச் சேர்ந்தது என்று குறிக்கும் வகையில் சிவப்பு கோடு போட்டனர்.

மேலும், 'நென்மேணி ஊராட்சி உங்களை வரவேற்கிறது' என்று தமிழக எல்லையில் அறிவிப்பு பலகை வைத்தனர். இதை அறிந்த நாம் தமிழர் கட்சியினர் நீலகிரி ஆட்சியரிடம் புகார் அளித்தனர்.

இந்நிலையில், இப்பிரச்சினை மீண்டும் எழுந்துள்ளது. தற்போது மீண்டும் கேரள மாநிலம் சார்பில் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யாவிடம் கேட்ட போது, 'தமிழ்நாடு எல்லையான தாளூரில் கேரளாவின் வயநாடு மாவட்ட எல்லையும் உள்ளது.

அப்பகுதியில் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டதால் பிரச்சினை எழுந்துள்ளது. இதுகுறித்து வயநாடு ஆட்சியரிடம் பேசியுள்ளோம். ஏற்கெனவே இருந்த அறிவிப்பு பலகைக்கு பதிலாக புதிய பலகை வைத்துள்ளனர். அதை அகற்ற கூறியுள்ளோம்.

இந்த பிரச்சினை தொடர்பாக இரு மாநிலம் சார்பில் டிஜிட்டல் சர்வே செய்யப்படவுள்ளது. அதுவரை முன்பிருந்த நிலையே தொடர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு மாநிலங்கள் சார்பில் சர்வே முடிந்ததும் எல்லை குறித்து முடிவு செய்யப்படும்' என்றார்.

# கோடநாடு வழக்கு விசாரணையை இன்னும் முடிக்காமல் இருப்பது ஏன்? - சிபிசிஐடி போலீஸாருக்கு நீதிபதி கேள்வி

**ஊட்டி, மார்ச் 8:** கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணையை இன்னும் முடிக்காமல் இருப்பது ஏன் என சிபிசிஐடி தரப்பிடம் நீதிபதி கேள்வி எழுப்பினார். மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா ஆகியோருக்கு சொந்தமான தேயிலை எஸ்டேட் நீலகிரி மாவட்டம் கோடநாடு பகுதியில் உள்ளது.

இந்த எஸ்டேட்டில் கடந்த 2017-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் தேதி காவலாளியை கொலை செய்த ஒரு கும்பல் பங்களாவில் இருந்த சில ஆவணங்களை கொள்ளையடித்துச் சென்றது. இதுதொடர்பாக முக்கிய குற்றவாளி சயான் உட்பட 10 பேரை போலீஸார் கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு ஊட்டி நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கு மண்டல ஐஜி தலைமையில் 5 தனிப் படைகள் அமைத்து விசாரணை துரிதப்படுத்தப்பட்டது. அப்போது கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் தடயங்களை அழித்ததாக கனகராஜின் சகோதரர் தனபால், உறவினர் ரமேஷ் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் தனிப் படை போலீசார் 316 பேரிடம் மறுவிசாரணை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து கோடநாடு வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டது. சிபிசிஐடி போலீஸார் பல்வேறு கட்டங்களாக வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இந்த வழக்கு ஊட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கில், அரசு தரப்பு வழக்கறிஞர் கனகராஜ், சிபிசிஐடி ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையிலான போலீஸாரும் குற்றம்சாட்டப்பட்டவர்களில் வாளையார் மனோஜும் ஆஜராகினர்.

இந்நிலையில், விசாரணையை இன்னும் முடிக்காமல் இருப்பது ஏன் என நீதிபதி முரளிதரன் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அதிகாரிகள், இதுவரை 269 சாட்சிகளிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பாக செல்போன் உரையாடல் மற்றும் தகவல் பரிமாற்றம் குறித்து குஜராத்தில் உள்ள பிஎஸ்என்எல் ஆய்வகத்திடம் இருந்து அறிக்கை கேட்டிருப்பதாகவும் இன்னும் அந்த நிறுவனத்திடமிருந்து தகவல்கள் வராததால் தாமதமாகி வருகிறது என்றும் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, வழக்கு விசாரணையை ஏப் .24-க்கு தள்ளிவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

# பரங்கிமலையில் களரிப்பயற்று முதல் குதிரையேற்றம் வரை ராணுவ அதிகாரிகளின் சாகச நிகழ்ச்சி



**சென்னை, மார்ச் 8:** சென்னை ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி முடித்த ராணுவ அதிகாரிகளின் வீரதீர சாகச நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன. சென்னை பரங்கிமலையில் உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் (ஓடிஏ), குறுகிய கால சேவை ஆணையம் (எஸ் எஸ்சி) உள்ளிட்ட பிரிவுகளுக்கான அதிகாரிகளுக்கு பயிற்சி நிறைவு விழா அணிவகுப்பு நடைபெறவுள்ளது.

முன்னதாக, சென்னை ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மைக்கேல் ஏ.ஜே.பெர்னாண்டஸ் முன்னிலையில் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் பயிற்சியை முடித்து ராணுவ அதிகாரிகளாக பொறுப்பேற்கக் காத்திருக்கும் பயிற்சி அதிகாரிகள், தங்களின் கடினப் பயிற்சியின் வெளிப்பாடாகப் பல்வேறு சாகசங்களை செய்து காட்டினர்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில், ராணுவ வீரர்களின் அடிப்படை பலமான உடல் தகுதி திறன்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அதைத்தொடர்ந்து, இந்திய ராணுவத்தின் பிரத்யேக தற்காப்பு கலை முறையான 'அமர்' மூலம் ஆயுதங்கள் இன்றி எதிரிகளை எதிர்கொள்ளும் நுணுக்கங்களை அதிகாரிகள் நிகழ்த்திக் காட்டினர்.

குதிரையேற்ற வீரர்களின் லாவகமான செயல்பாடுகளும், குதிரைக்கும் வீரருக்கும் இடையிலான ஒருங்கிணைந்த சாகசங்களும் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தின. கேரளாவின் பாரம்பரிய தற்காப்பு கலையான களரிப்பயற்று, அதன் தாள லயத்துடன் கூடிய உடல் அசைவுகளால் அனைவரையும் கட்டிப்போட்டது.

நிகழ்ச்சியின் இறுதிப் பகுதியாக, போர்க்களத்தில் எதிரிகளின் பதுங்கு குழிகளை தகர்க்கும் 'பங்கர் பஸ்டிங்' ஒத்திகை நிகழ்த்தப்பட்டது. இது அதிகாரிகளின் ஆவேசமான தாக்குதல், போர்த்திறனை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்தது. நிகழ்ச்சியின் இறுதியில், சாகசங்களில் ஈடுபட்ட அதிகாரிகளை லெப்டினன்ட் ஜெனரல் மைக்கேல் ஏ.ஜே. பெர்னாண்டஸ் பாராட்டினார்.

# மசினகுடியில் கரடிகள் நடமாட்டம் அதிகரிப்பு- சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறை எச்சரிக்கை



**நீலகிரி, மார்ச் 8:** நீலகிரி மாவட்டம் மசினகுடி மற்றும் மாயார் பகுதிகளில் இலந்தை பழ சீசன் தொடங்கியுள்ளதால், கரடிகள் சாலையோர மரங்களில் ஏறி பழங்களை உண்ணும் காட்சிகள் அடிக்கடி காணப்பட்டு வருகின்றன.

முதுமலை புலிகள் காப்பகம் அருகிலுள்ள வனப்பகுதிகளில் உள்ள இலந்தை மரங்களில் பழங்கள் பழுத்து வரும் நிலையில், அவற்றை உண்பதற்காக கரடிகள் அதிக அளவில் அப்பகுதிக்கு வரத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக அதிகாலை மற்றும் பகல் நேரங்களில் கரடிகள் மரங்களில் ஏறி இலந்தை பழங்களை உண்டு செல்லும் காட்சிகள் சாலையோரங்களில் தென்படுகின்றன. இதனால் மசினகுடி மாயார் சாலையில் செல்லும் சுற்றுலா பயணிகள் மற்றும் வாகன ஓட்டிகள் பலர் கரடிகளை வேடிக்கை பார்க்கவும், புகைப்படம் மற்றும் காணொளி எடுக்கவும் வாகனங்களை நிறுத்தி பார்க்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இது ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கக்கூடும் என்பதால் வனத்துறையினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். கரடிகள் எந்த நேரத்திலும் சாலையை கடந்து செல்லக்கூடும் என்பதால், வாகன ஓட்டிகள் மிகவும் கவனமாக பயணம் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சாலையோரங்களில் கரடிகள் காணப்பட்டால், வாகனங்களை நிறுத்தி அருகில் சென்று பார்க்கவோ, புகைப்படம் எடுக்கவோ கூடாது என்றும், இடையூறு ஏற்படுத்தாமல் உடனே அந்த இடத்தை கடந்து செல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகள் கரடிகளுக்கு அருகில் சென்று தொந்தரவு செய்தால் அல்லது வாகனங்களை நிறுத்தி கூட்டம் உருவாக்கினால், அது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஆபத்தாக மாறக்கூடும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் எச்சரிக்கையை மீறி விலங்குகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கோடை விடுமுறையை முன்னிட்டு மேட்டுப்பாளையம்- ஊட்டிக்கு சிறப்பு மலை ரெயில்

**மேட்டுப்பாளையம், மார்ச் 8:** கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு தினசரி காலை 7.10 மணிக்கு மலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த ரெயில் மேட்டுப்பாளையம் ரெயில் நிலையத்திலிருந்து குன்னூர் வரை பசுமையான காடுகள், அருவிகள், வனவிலங்குகள் நடமாட்டம், பாறையை குடைந்து உள்ளே செல்லும் குகைகள் உள்ளிட்டவை சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது.

இதனால் இந்த ரெயிலில் பயணம் செய்ய உள்ளூர் வாசிகள் மட்டுமல்லாமல் வெளியூர், வெளிநாடுகளை சேர்ந்த ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆனால் இந்த ரெயிலில் போதிய இருக்கை வசதிகள் இல்லாததால் கூடுதலாக மலை ரெயில் இயக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் தொடர்ந்து ரெயில்வே நிர்வாகத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது பள்ளி, கல்லூரிகளுக்கு தேர்வு முடிந்து கோடை விடுமுறை அளிக்கப்பட உள்ளது. இதனை கருத்தில் கொண்டு சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக இருக்கும் என்பதால் தென்னக ரெயில்வே நிர்வாகம் சார்பில் கூடுதலாக மலை ரெயில் இயக்க முடிவு செய்யப்பட்டது.

இதன்படி வருகிற 27-ந்தேதி முதல் ஜூலை 5-ந்தேதி வரை மேட்டுப்பாளையம் ரெயில் நிலையத்திலிருந்து காலை 9.10 மணிக்கு புறப்பட்டு, ஊட்டிக்கு மதியம் 2.25 மணிக்கு செல்லும் வகையில் சிறப்பு மலை ரெயில் இயக்கப்பட உள்ளது.

இதேபோல் குன்னூரில் இருந்து ஊட்டிக்கும், கேத்தியிலிருந்து ஊட்டிக்கும் மலை ரெயில் இயக்கப்பட உள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# யுபிஎஸ்சி தேர்வில் தேசிய அளவில் 2-வது இடம்: வாடிப்பட்டி எலெக்ட்ரிக் கடைக்காரரின் மகள் சாதனை

**மதுரை, மார்ச் 8:** குடிமைப்பணிகளுக்கான யுபிஎஸ்சி தேர்வில் தேசிய அளவில் 2-வது இடம்பிடித்து மதுரை வாடிப்பட்டி எலக்ட்ரிக் கல் கடைக்காரர் முருகதாஸ் என்பவரின் மகள் ராஜேஸ்வரி சுவே சாதனை படைத்துள்ளார்.



மதுரை மாவட்டம் வாடிப்பட்டியைச் சேர்ந்தவர் முருகதாஸ். இவர், எலக்ட்ரிக் கல் கடை நடத்தி வருகிறார். இவரது மனைவி நாகராணி. அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரியில் கணிதத் துறை உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

இவர்களுக்கு ராஜேஸ்வரி சுவே என்ற மகளும், குமாரச் செல்வன் என்ற மகனும் உள்ளனர். ராஜேஸ்வரி சுவே கடந்த 2018-ல் பிஇ (இஇஇ) முடித்துவிட்டு போட்டித் தேர்வுக்கு தயாராகி வந்தார். ஏற்கெனவே 3 முறை யுபிஎஸ்சி தேர்வு எழுதிய நிலையில் 2024-ல் டிஎன்பிஎஸ்சி குரூப்-1 தேர்வில் தேர்ச்சி பெற்று துணை ஆட்சியரானார்.

தற்போது சென்னை தலைமைச் செயலகத்தில் பயிற்சி அதிகாரியாக பணியில் இருக்கிறார். இருப்பினும், பணிபுரிந்து கொண்டே தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தில் இணைந்து யுபிஎஸ்சி தேர்வுக்கு பயிற்சி பெற்றார்.

பின்னர் தேர்வில் பங்கேற்று முடிவுகளுக்காக காத்திருந்தார். இந்நிலையில் 2025-ம் ஆண்டுக்கான யுபிஎஸ்சி தேர்வு முடிவுகள் நேற்று வெளியான நிலையில், தேசிய அளவில் 2-வது இடத்தை பெற்று ராஜேஸ்வரி சுவே சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'போட்டித் தேர்வுகளுக்காக தொடர்ந்து பயிற்சி பெற்று வந்தேன். 7 ஆண்டுகள் தொடர் முயற்சி, உழைப்புக்கு தற்போது வெற்றி கிடைத்துள்ளது.

எனது பெற்றோர் அளித்த ஊக்கத்தால் என்னால் சாதிக்க முடிந்தது. தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தில் 225 பேருக்கு மாதம்தோறும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் நானும் இணைந்து பயனடைந்துள்ளேன்' என்று கூறினார்.

# தமிழ்நாடு தகவல் ஆணையத்துக்கு புதிய மாநில தகவல் ஆணையர்கள் நியமனம்



**சென்னை, மார்ச் 8:** தமிழ்நாடு தகவல் ஆணையத்துக்கு இரு புதிய மாநில தகவல் ஆணையர்கள் பதவியேற்றனர். இவர்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (மத்திய சட்டம் 22/2005) பிரிவு 15 -இன் துணைப் பிரிவு (3) ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஆளுநர் ஆர்.என்.ரவி, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதுல்ய மிஸ்ரா, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோரை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநில தகவல் ஆணையர்களாக நியமித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அதுல்ய மிஸ்ரா, அபய்குமார் சிங் ஆகியோர் மாநில தகவல் ஆணையர்களாக ஆளுநர் ஆர். என். ரவி முன்னிலையில் பதவி ஏற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு தகவல் ஆணைய மாநில தலைமை தகவல் ஆணையர் ஷகீல் அக்தர், மனிதவள மேலாண்மைத் துறை அரசு முதன்மைச் செயலர் சி. சமயமூர்த்தி, ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆர். கிர்லோஷ் குமார், மாநில தகவல் ஆணையர்கள் பங்கேற்றனர்.

# 1,000 மின்சார குளிர்சாதன பேருந்துகள் கொள்முதல் செய்ய ஒப்பந்தம்

**சென்னை, மார்ச் 8:** தமிழகத்தில் 1,000 குளிர்சாதன வசதி கொண்ட தாழ்தள சொகுசு மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தை சென்னை மாநகர் போக்குவரத்துக்கழகம் கோரியுள்ளது.

ஏற்கெனவே, குளிர்சாதன வசதி கொண்ட பேருந்துகள் உள்பட 625 தாழ்தள வசதி கொண்ட மின்சார பேருந்துகளை மாநகர் போக்குவரத்துக்கழகம் கொள்முதல் செய்துள்ளது. இந்தப் பேருந்துகள் அனைத்தும் 2025 ஜூன் முதல் 2026 மார்ச் வரை 5 கட்டங்களாக பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.



இந்த நிலையில், குளிர்சாதன வசதி கொண்ட 1,000 தாள்தள சொகுசு மின்சார பேருந்துகளை மொத்த செலவு ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்ய போக்குவரத்துக்கழகம் திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தை மாநகர் போக்குவரத்துக்கழகம் கோரியுள்ளது. ஒப்பந்தம் கோரும் நிறுவனங்கள் தங்கள் விண்ணப்பங்களை மாநகர் போக்குவரத்துக்கழகத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மார்ச் 25 முதல் ஏப். 7-ஆம் தேதி மாலை 4 மணி வரை ஒப்பந்தத்துக்கான ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். ஏப். 7 -ஆம் தேதி மாலை 4.30-க்கு ஒப்பந்தம் திறக்கப்படும். தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் ஒப்பந்தம் வழங்கப்படும் என்றும், விரைவில் பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என மாநகர் போக்குவரத்துக்கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் கார்னர்

## "மோடியை ஆங்கிலத்தில் பேசவைத்தது திராவிட மாடல் ஆட்சி" – உதயநிதி பெருமிதம்



**சென்னை, மார்ச் 8:** இதுவரை தமிழகத்துக்கு வருகை தந்த பிரதமர் மோடி இந்தியில் மட்டுமே பேசிவந்தார். ஆனால், கடந்த வாரம் மதுரையில் நடைபெற்ற விழாவில் அவர் முதல் முறையாக ஆங்கிலத்தில் பேசினார். அவரை ஆங்கிலத்தில் பேசவைத்தது திராவிட மாடல் ஆட்சி" என துணை முதல்வரும் திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டம், இலஞ்சியில் திமுக சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெற்றது. இதில், திமுக-வின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில், உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: மத்திய பட்ஜெட் தாக்கல் செய்த உடனேயே அவசர அவசரமாக பட்ஜெட்டை பாராட்டி பழனிசாமி அறிக்கை வெளியிட்டார். அந்த அளவுக்கு அவர் மோடிக்கும், அமித் ஷாவுக்கும் முரட்டு அடிமையாக உள்ளார். இதுவரை தமிழகத்துக்கு வருகை தந்த மோடி இந்தியில் மட்டுமே பேசி வந்தார்.

ஆனால் கடந்த வாரம், மதுரையில் நடைபெற்ற விழாவில் அவர் முதல் முறையாக ஆங்கிலத்தில் பேசினார். அவரை ஆங்கிலத்தில் பேச வைத்தது திராவிட மாடல் ஆட்சி. மோடி பங்கேற்ற விழா மேடையின் முகப்பில் தந்தை பெரியார் படம் வைக்கப்பட்டிருந்தது.

அதை அவசர அவசரமாக அகற்ற பாஜக-வினர் சொன்னதைக் கேட்டு பெரியார் படத்தை அகற்றிவிட்டு, மோடியின் படத்தை அதிமுக-வினர் வைத்தனர். இதிலிருந்து, எந்த அளவுக்கு முரட்டுத்தனமான அடிமையாக பழனிசாமி உள்ளார் என்பதை தெரிந்துகொள்ளலாம். அதிமுக என்பதை, 'அமித் ஷா திராவிட முன்னேற்றக் கழகம்' என மாற்றக்கூட பழனிசாமி தயங்க மாட்டார். இவ்வாறு அவர் பேசினார்.

## வெல்லமண்டிக்கு இனிப்பான செய்தி: அமைப்புச் செயலாளராக்கி அரவணைத்த பழனிசாமி

**சென்னை, மார்ச் 8:** ஓபிஎஸ் அணியில் இருந்துவிட்டு அண்மையில் மீண்டும் அதிமுக-வில் இணைந்த முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜனுக்கு அமைப்புச் செயலாளர் பதவி வழங்கி அரவணைத்திருக்கிறார் பொதுச்செயலாளர் பழனிசாமி.

கடந்த 1972-ம் ஆண்டுக்கு முன்பு திமுக-வில் இருந்த வெல்லமண்டி நடராஜன், எம்ஜிஆர் அதிமுக-வை தொடங்கியபோது, எம்ஜிஆர் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து அதிமுக-வில் சேர்ந்தார். எம்ஜிஆர் மறைந்தபோது, அதிமுக ஜெயலலிதா அணி, ஜானகி அணியாக பிரிந்ததது. அப்போது, ஜெயலலிதா ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தார்.

திருச்சியை சேர்ந்த இவர், 2016-ல் ஜெயலலிதா மற்றும் பழனிசாமி தலைமையிலான அமைச்சரவையில் சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்தார். 2017-ல் ஓபிஎஸ் அணி, டிடிவி. தினகரன் அணி எனப் பிரிந்தபோது, தினகரன் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தார். அதன் பிறகு பழனிசாமி, தினகரன் அணி உருவானபோது, பழனிசாமி ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தார். 2021-ல் அதிமுக-வில் ஒற்றைத் தலைமை சர்ச்சை எழுந்தபோது ஓபிஎஸ் பக்கம் நின்றார் நடராஜன். அதனால் அதிமுக-விலிருந்து நீக்கப்பட்டார்.

ஆரம்பத்தில் இருந்து நடராஜன் எடுத்த நிலைப்பாடுகள் எல்லாம் சரியாகவே இருந்த நிலையில், ஓபிஎஸ் ஆதரவு நிலைப்பாடு அவரது அரசியல் வாழ்க்கையில் சரிவை ஏற்படுத்தியது. தற்போது ஓபிஎஸ்ஸும் அவரது விசுவாசிகளும் திமுக-வில் ஐக்கியமான நிலையில், அதை ஏற்க மனமின்றி அண்மையில் மீண்டும் அதிமுக-வில் இணைந்தார். அவருக்கு தற்போது அமைப்புச் செயலாளர் பதவி வழங்கி அங்கீகரித்திருக்கிறார் பழனிசாமி.

தற்சமயம் தினகரன், சசிகலா, ஓபிஎஸ் பக்கம் இருக்கும் அதிமுக-வினர் பலரும் தங்களுக்கு உரிய அங்கீகாரம் இன்றி அதிருப்தியுடன் இருந்து வருகின்றனர். அரசியல் எதிர்காலம் கருதி அதிமுக-வுக்கே மீண்டும் சென்றுவிடலாமா என்ற ஊசலாட்டத்திலும் அவர்களில் பலர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அதிமுக-வுக்கு இழுக்கும் விதமாகவே வெல்லமண்டி நடராஜனுக்கு பழனிசாமி அமைப்புச் செயலாளர் பதவி வழங்கி இருப்பதாகச் சொல்கிறார்கள்.

தனது இந்த நடவடிக்கையின் மூலம், தவறை உணர்ந்து மீண்டும் அதிமுக-வுக்கு திரும்புவோருக்கு கட்சியில் உரிய மரியாதை வழங்கப்படும் என்பதை சூசகமாக பழனிசாமி தெரிவித்திருக்கிறார். விஜய் வரவால் தேர்தல் களம் கடுமையாக இருக்கும் என்பதால் பிரிந்து போனவர்களை மீண்டும் உள்ளே கொண்டு வந்து அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதிலும் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார் பழனிசாமி.

## நிதிஷ்குமாரின் கதி எடப்பாடி பழனிச்சாமிக்கு நடக்காதா? - திருமாவளவன்



**சென்னை, மார்ச் 8:** கடந்த ஆண்டு தேர்தலில் என்டிஏ கூட்டணியில் வென்ற நிதிஷ்குமார் பீகார் முதலமைச்சராக 10வது முறையாக பொறுப்பேற்றார்.

பீகார் முதலமைச்சராக பொறுப்பேற்ற 4 மாதங்களே ஆன நிலையில் பதவியில் இருந்து விலகுவதை நிதிஷ் குமார் உறுதி செய்துள்ளார். முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்வதை உறுதி செய்த நிதிஷ் குமார் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட நிதிஷ் குமார் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில்,சென்னை எழும்பூரில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய விசிக தலைவர் திருமாவளவன், "அண்ணன் எடப்பாடியாரே எச்சரிக்கையாக இருங்கள். எம்ஜிஆர் ஜெயலலிதாவும் கட்டிக் காத்த திராவிட இயக்கமான அதிமுகவை கரைய விட்டு விடாதீர்கள், காப்பாற்றுங்கள். தனித்து நின்றாலே அதிமுகவின் வாக்கு வங்கி மிகப்பெரிய அளவில் கை கொடுக்கும்.

ஜெயலலிதா அம்மையார் இல்லாமலேயே 65-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் அதிமுக வெற்றி பெற்றது. இதை முன்பே நான் கூறினேன். தற்போது, எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக வந்தால் அவரால் அந்த பதவியில் அமர முடியுமா? நிதீஷ்குமாரின் கதி எடப்பாடி பழனிசாமிக்கு நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# புழல் சிறையில் இருக்கும் ஹரி நாடார் நீதிபதிக்கு வெளியிட்ட ஆடியோ சமூக வலைதளங்களில் வைரல்!

**சென்னை, மார்ச் 8:** புழல் மத்திய சிறையில் இருக்கும் ஹரி நாடார் நீதிபதிக்கு வெளியிட்ட ஆடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கோவை, பீளமேடு பகுதியைச் சேர்ந்தவர் எஸ்.சிவசாமி (57). சுமார் 30 ஆண்டுகளாகத் தொழில் செய்து வரும் இவர், தனது நிறுவனத்தை விரிவுபடுத்த ரூ.25 கோடி கடன் பெற முயற்சி மேற்கொண்டு வந்துள்ளார். அப்போது, அவரிடம் பழக்கமான நபர் மூலம் சேலம் மாவட்டம், எடப்பாடியைச் சேர்ந்த செந்தில்வாசன் (51) என்பவர் கடந்த மே மாதம் அறிமுகமாகியுள்ளார்.

பெரிய நிதி முதலீட்டாளர்களுடன் தொடர்பு இருப்பதாகக் கூறிய செந்தில்வாசன், 2 சதவீதம் கமிஷன் அடிப்படையில் கடன் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதையடுத்து, சென்னை, துரைப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த கார்த்திகேயன் (எ) கதிரேசன் (37), ஹரி நாடார் (41), தேவகோட்டையைச் சேர்ந்த அன்புசெல்வன், தென்காசியைச் சேர்ந்த ஆண்டனி, செந்தில்வாசன் ஆகியோர் சேலத்தில் உள்ள ஒரு தனியார் விடுதியில் வைத்து பாங்க் ஆஃப் பரோடா பெயரில் தலா ரூ.12.5 கோடி மதிப்பிலான 2 போலி வரைவோலைகளை சிவசாமியிடம் கடந்த 18.7.2025-இல் வழங்கினர். தொடர்ந்து, பாதுகாப்பு ஒப்பந்தப் பதிவு மற்றும் இதர நடைமுறைகளுக்காக சிவசாமியிடமிருந்து ரூ.67 லட்சத்தைப் பெற்றனர்.

நீண்ட நாள்களாகியும் கடன் தொகை வராததால் சந்தேகமடைந்த சிவசாமி, சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகளிடம் விசாரித்தபோது, அவர்கள் கொடுத்த வரைவோலைகள் போலியானவை என்பது தெரியவந்தது.

இது குறித்த புகாரின்பேரில், செந்தில்வாசன், ஹரி நாடார், கார்த்திகேயன் ஆகியோரை கைது செய்த பீளமேடு போலீஸார், தலைமறைவாக உள்ள அன்புசெல்வன், ஆண்டனி ஆகியோரைத் தேடி வருகின்றனர்.

வேறொரு வழக்கில் கைது செய்யப்பட்ட செந்தில்வாசன் கோவை மத்திய சிறையிலும், ஹரி நாடாரும், கார்த்திகேயனும் மற்றொரு மோசடி வழக்கில் சென்னை புழல் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், புழல் மத்திய சிறையில் இருக்கும் ஹரி நாடார் நீதிபதிக்கு வெளியிட்ட ஆடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில், அரசியல் சூழ்ச்சி காரணமா வரும் பேரவைத் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்பதற்காகவே தன் மீது போலீசார் ஜோடித்த பொய் வழக்கில் சென்னை புழல் மத்திய சிறையில் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் இருந்து வருகிறேன்.

இதைத்தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு சாத்தான்குளம் தந்தை மகன் கொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு வரும் 23 ஆம் தேதி தீர்ப்பு வழங்க உள்ள நிலையில், இந்த வழக்கில் சிக்கி உள்ள அனைவருக்கும் சாகும் வரை கடுங்காவல் தண்டனை விதிக்க வேண்டும். கருணைகள் காட்டாமல் எந்தவித சலுகைகளும் வழங்கக்கூடாது என நீதிபதிக்கு சத்திரிய சான்றோர் படை கட்சித் தலைவர் - ஹரி நாடார் புழல் சிறையில் இருந்து இந்த ஆடியோ வெளியானதால் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com